நவம்பர் 2016 November | இதழ் 310 ISSUE

# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION

1991 26th Year 2016



அற்றைத் திங்கள்



சாரணர் நூற்றாண்டு



புதிய சட்டவாளர்



மெய்யோடு மெய்யாகி

சமூகத்துடன்
இணைந்த
வளர்ச்சி
ஸ்தாபிதம்-1991

Growing
with the
Community
ESTD-1991

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் & தயாரிப்பு
முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

விநியோக இணைப்பாளர்
இ. சிவலிங்கம்

பொதுமக்கள் தொடர்பு
என். குமாரதாஸன்
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிராஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்:
www.tamilsinformation.info

ஆசிரியரிடமிருந்து **From the Editor**

# 78,000 முதியவர்கள் நிலை!

கடந்த மாதம் கனடிய மக்களை மிகவும் அதிர்ச்சிக்குள்ளாக்கிய விடயம் அப்பாவிகளான எட்டு முதியவர்கள் கொலை செய்யப்பட்டதாக வெளியான செய்தி!

இரண்டு முதியோர் பராமரிப்பு இல்லங்களில் தங்கியிருந்த 79 வயதுக்கும் 96 வயதுக்குமிடைப்பட்ட முதியவர்களை, அங்கு கடமையாற்றிய மருத்துவத் தாதி ஒருவரே கொலை செய்துள்ளார் என்ற செய்தி கடந்த மாதம் 25ம் திகதி உலகெங்குமுள்ள ஊடகங்களின் பிரதான செய்தியாக வெளிவந்தது.

2007ம் ஆண்டுக்கும் 2014ம் ஆண்டுக்குமிடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற இச்சம்பவங்கள் தொடர்பாக தற்போது 49 வயதான அந்தத் தாதி கைது செய்யப்பட்டு, எட்டுப் பேரைக் கொலை செய்ததென்ற முதலாம் தரக் குற்றச்சாட்டில் பொலிசார் இவரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியதை அடுத்து அவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டார்.

கொலை செய்யப்பட்டவர்களில் ஐவர் முதிய அன்னையர்; மூவர் தந்தையர்; இவர்களில் ஒருவர் இரண்டாவது உலக மகாயுத்தத்தில் இராணுவத்தில் கடமையாற்றிய யுத்த வீரர்.

ஒன்ராறியோவின் 'வுட்ஸ்ராக்' என்ற இடத்திலுள்ள முதியோர் பராமரிப்பு இல்லமொன்றில் ஏழு முதியவர்களையும், ஒன்ராறியோ லண்டனிலுள்ள முதியோர் பராமரிப்பு இல்லமொன்றில் ஒரு முதியவரையும் எவரும் சந்தேகப்படாதவாறு எதோ ஒருவகை மருந்தைப் பயன்படுத்தி எலிசபெத் வாட்டோஃபர் என்ற தாதி கொலை செய்ததாகப் பொலிசார் பொதுமக்களின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளனர்.

தமது குடும்ப மூத்தவர்கள் இயற்கையாக மரணத்தைத் தழுவியதாக இதுவரை நம்பியிருந்த கொலைசெய்யப்பட்டதாகக் கூறப்படும் எட்டு முதியவர்களதும் குடும்ப உறவினர்கள், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் இப்போது வெளிவந்திருக்கும் செய்தியறிந்து ஆறாத்துயரில் ஆழ்ந்துள்ளனர்.

இவ்விவகாரம் தற்போது நீதிமன்றத்தின் முன்னாலுள்ளதால், இதுபற்றி மேலதிகமாக எதனையும் விமர்சிக்கும் உரிமை எவருக்குமில்லை.

ஆனால், ஒன்ராறியோ மாகாணத்திலுள்ள முதியோர் பராமரிப்பு நிலையங்களில் தற்போது 'நம்பிக்கையுடன்' தங்கள் நாட்களைக் கடத்திக்கொண்டிருக்கும் எமது மூத்தோர்களின் நிலைமை பற்றிச் சிந்திப்பது அக்கறையுள்ள ஒவ்வொரு பிரஜைக்கும் உள்ளதென்பதை எவரும் மறுக்க முடியாது.

தற்போது சுமார் 78,000 வரையான முதியோர் ஒன்ராறியோவிலுள்ள முதியோர் பராமரிப்பு இல்லங்களில் இருப்பதாக அரசாங்க புள்ளிவிபரம் தெரிவிக்கிறது.

இவர்கள் நேர்த்தியாகவும் முறையாகவும் அங்கு கவனிக்கப்படுகிறார்கள் என்ற நம்பிக்கையிலேயே அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

ஆனால் அங்கு அவர்கள் கொலை செய்யப்படுவார்களோ என்ற அச்சம் இவர்களிடம் ஏற்படுவதைத் தடுக்க ஒன்ராறியோ அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

முதியோர் இல்லங்களில் தங்கியிருப்போரின் மனநிலை இதனால் பாதிக்கப்படாதிருக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

**Established**
February 1991

**P.O. Box - 3, Station F**
**Toronto, ON. M4Y 2L4,**
**Canada**

**Tel: 416 920 9250**
Fax: 416 921 6576

**email**
tamilsinfo@sympatico.ca

**Produced by**
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

**Published by**
Ahilan Associates

**Editor in chief**
Thiru S. Thiruchelvam

**Associate Editor**
Ranji Thiru

**Assistant Editor and Production Manager**
Sasi Pathmanathan

**Assistant Editors**
Quintus Thuraisingam
Anojoni Kumaradasan

**Manager**
R. R. Rajkumar

**Circulation Coordinator**
R. Sivalingam

**Public Relation**
N. Kumaradasan
P. Sivasubramaniam

**Technical Support**
Haran Graph

**Monthly**
5000 Copies

**Annual**
6000 Copies

**Website:**
www.tamilsinformation.info

## நயாகரா மேற்கு - கிளன்புறூக் இடைத்தேர்தல் இந்தமாதம் 17 கன்சர்வேடிவ் அபேட்சகராக 19 வயது மாணவன் தெரிவு



ஒன்ராறியோ மாகாணசபையின் நயாகரா மேற்கு - கிளன்புறூக் கொகுதியின் இடைத்தேர்தலில் போட்டியிட கன்சர்வேடிவ் கட்சி அபேட்சகராக 19 வயது பல்கலைக் கழக மாணவன் சாம் ஊஸ்டர்ஹொஃப் (Sam Oosterhoff) தெரிவாகி மாகாண அரசியலில் ஒரு சாதனை படைத்துள்ளார்.

சென். கத்றினிலுள்ள புறாக் பல்லைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை மாணவனான சாம் கடந்த மாதம் 21ம் திகதி நடைபெற்ற அபேட்சர் தெரிவுப் போட்டியில் 699 வாக்குளைப் பெற்றார். இவரை எதிர்த்துப் போட்டியிட்டவர்களில் முக்கியமானவரான கன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் றிக்கி டைக்ஸ்ரா 525 வாக்குகளைப் பெற்றார். டைக்ஸ்ரா முன்னர் சென். கதறின் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவுமிருந்தவர்.

இதில் போட்டியிட்ட இன்னொரு பிரமுகரான பிரதேச சபை உறுப்பினர் குவேர்க் 225 வாக்குகளை மட்டுமே பெற்று நான்காம் இடத்துக்குத் தள்ளப்பட்டார். இந்த அபேட்சகர் தேர்தல் முடிவு பலருக்கும் அதிர்ச்சி வைத்தியத்தைக் கொடுத்துள்ளது.

இத்தொகுதியின் உறுப்பினராகவிருந்த கன்சர்வேடிவ் கட்சியின் முன்னாள் தலைவர் ரிம் குடாக் தமது பதவியை ராஜிநானாச் செய்ததால் புதிய உறுப்பினரைத் தெரிவதற்கான தேர்தல் இந்த மாதம் 17ம் திகதி நடைபெறவுள்ளது.

லிபரல் கட்சியின் சார்பில் விக்கி றிங்குவெற்றும், என் டி. பி. கட்சியின் சார்பில் மைக்கல் தோமசும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளனர். கத்லின் வின் தலைமையிலான லிபரல் அரசுக்கான ஒரு பலப்பரீட்சையாக இத்தேர்தல் அமையவுள்ளது. ஏற்கனவே றுஜ்றிவர் தொகுதியில் கோட்டை விட்டதைப் போன்று இங்கும் லிபரல் தோல்வியடைந்தால் அது கத்லினுக்கு பின்னடைவை ஏற்படுத்துவது நிச்சயம்.

## 2018 ஒன்ராறியோ மாகாண தேர்தலுக்கு தயாராகிறது தமிழர் 'பட்டாளம்'! பிறவுணின் நீல அணியில் சேர துடிப்பு

ஒன்ராறியோ மாகாண அரசுக்கான அடுத்த தேர்தல் 2018ம் ஆண்டு ஜுன் மாதம் 7ம் திகதி அல்லது அதற்கு முன்னர் நடைபெறுமென்பது ஓரளவுக்கு நிச்சயமாகிவிட்டது. இத் தேர்தல் 2018 அக்டோபரிலேயே நடைபெறவேண்டுமானாலும், அவ்வேளையில் இங்குள்ள நகரசபைகளின் தேர்தல்களும் நடைபெறவிருப்பதால் ஏற்படக்கூடிய சங்கடங்களை கருத்தில்கொண்டு முற்கூட்டியே மாகாணத் தேர்தலை நடத்த ஏற்பாடாகின்றது.

தற்போது மாகாண சபை 107 தொகுதிகளைக் கொண்டதாகவுள்ளது. கனடிய நாடாளுமன்ற தேர்தலுக்கு எல்லைகள் தொகுதி ரீதியாக மாற்றப்பட்டதால் ஏற்பட்ட அதிகரிப்புக்கிணங்க, ஒன்ராறியோ மாகாண சபையிலும் 15 தொகுதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, 2018ல் நடைபெறும் தேர்தல் 122 தொகுதிகளுக்கு (107+15) இடம்பெறும். அதிகரிக்கும் தொகுதிகளில் 14 தென்ஒன்ராறியோவிலும் ஒன்று மட்டும் வடஒன்ராறியோவிலுமாகவிருக்கும்.

இத்தேர்தலுக்கு இன்னமும் 18 மாதங்கள் வரையிருக்கினும் பல தமிழர்கள் இப்போதே அதற்குத் தம்மைத் தயாராக்கி வருகின்றனர் அதாவது, தேர்தல் நியமன போட்டியில் இவர்கள் குடுமிபிடி சண்டையில் இறங்கியுள்ளனர். அதிலும், பற்றிக் பிறவுணின் கன்சர்வேடிவ் கட்சியில் நியமனம் பெறவே இவர்கள் களத்தில் இறங்கியுள்ளனர்.

அடுத்த தேர்தலில் கன்சர்வேடிவ் கட்டியே ஆட்சியைக் கைப்பற்றுமென பல ஆருடங்கள் வெளிவந்திருப்பதாலேயே, எப்படியாவது இக்கட்சியில் தாமும் ஒரு தொகுதியைப் பிடித்துவிட வேண்டுமென தமிழர் 'பட்டாளம்' முனைந்துள்து. இதுவரை ஒன்றாகவிருந்த சிலர் தமக்குள் இமுபறி நடத்தும் படலமும் ஆரம்பித்துள்ளது.

றூஜ்றிவர் தொகுதிக்கு இந்த வருடம் நடைபெற்ற இடைத்தேர்தலில் கன்சர்வேடிவ் கட்சியில் நியமனம்பெறப் பல தமிழர் முயற்சித்தினர். ஆனால் அது சாத்தியமாகவில்லை. அப்போது, அடுத்த மாகாண சபைத் தேர்தலில் மூன்று தமிழர்களுக்குத் தொகுதி தரப்படுமென்று பற்றிக் பிறவுண் அவர்களுக்குத் 'தசரத' வாக்குக் கொடுத்ததாக ஒரு செய்தி உலாவரத் தொடங்கியது.

அந்த மூன்று இடங்கள் எதுவென்று தெரியாமலே தமிழர் 'பட்டாளம்' படையெடுப்பில் இறங்கியுள்ளது. எந்தத் தேர்தலிலும் வெற்றி பெறாது தம்மைத் தாமே பிரதமராக நியமித்து அழகு பார்க்கும் 'ருத்திர' அரசாங்கத்தின்(?) உறுப்பினர்கள் எனப்படும் சிலர் இந்தப் 'பட்டாள'த்தில் இடம்பெற்றுள்ளதை மின்னஞ்சல்களும் முகநூல்களும் அறியத்தருகின்றன.

தற்போது உள்ளூராட்சிச் சபையொன்றின் உறுப்பினராகவிருக்கும் தமிழ்ப் பிரமுகரொருவரும் இத்தேர்தலில் போட்டியிடவிருப்பதாக பேச்சடிபடுகின்றது. இவரை நேரடியாகவே கட்சித் தலைவர் தொகுதியொன்றுக்கு நியமிக்கலாமென்ற அச்சம் கட்சிக்காரர் சிலருக்குக் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாயினும், அந்தப் பிரமுகர் இதுபற்றி இதுவரை எதனையும் தெரிவிக்கவில்லை.

இப்போது இங்கு நடைபெறும் தமிழரின் பொதுநிகழ்ச்சிகளில் 'வேட்பாளப்' பெருமக்களை அதிகம் காணக்கூடியதாகவுள்ளது. சந்தர்ப்பம் கிடைத்தால் மேடையேறவும் 'மைக்' பிடிக்கவும் இவர்கள் ஆவலாகவுள்ளனர். போகிற போக்கைப் பார்த்தால் எம்மவர் மத்தியில் வாக்காளரைவிட வேட்பாளர் தொகை அதிகரித்துவிடலாமென அரசியல் நோக்கர் ஒருவர் தெரிவித்ததைத் தட்டிக்கழிக்க முடியவில்லை. எதுவோ, கனடிய அரசியலை எம்மவர் சாக்கடையாக்காதிருக்க அவதானமாகவிருப்போம்!



எஸ்தி



றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

முதியோர் பராமரிப்பு இல்லங்களில் வசித்து வந்த எட்டு முதியவர்களைக் கொலை செய்ததென்ற குற்றச்சாட்டில் 49 வதான மருத்துவத் தாதி ஒருவரைப் பொலிசார் கைது செய்துள்ளனர். ஒன்ராறியோவிலுள்ள வூட்ஸ்ரொக் மற்றும் லண்டன் ஆகிய இடங்களிலுள்ள முதியோர் இல்லங்களில் வசித்துவந்த 79 வயதுக்கும் 96 வயதுக்கும் இடைப்பட்ட முதியவர்களே ஊசி மூலம் மருந்து ஏற்றிக் கொலை செய்யப்பட்டுள்ளதா - கவும், இது தொடர்பாக எலிஸபெத் றேசி மே என்பவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

ரொறன்ரோவில் கடந்த மாதம (அக்டோபர்) 25ம் திகதி வரை 56 கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதுவே கடந்த வருட கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை - யுமாகும். இவ்வருடம் முடிவடைய மேலும் இரண்டு மாதங்கள் இருப்பதால், கொலைகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமெனப் பொலிசார் கருதுகின்றனர். 2005ல் 80 கொலைகளும், 2007ல் 86 கொலைகளும் ரொறன்ரோவில் இடம்பெற்றன. ஆனால் 2013லும் 2014லும் தலா 57 கொலைகள் மட்டுமே இடம்பெற்றதாகப் பொலிசார் அறிவித்துள்ளனர்.

ரொறன்ரோவின் ஒரு டசினுக்கும் அதிகமான வீதிகளின் வேக எல்லையை மேலும் பத்துக் கிலோ மீட்டரால் குறைக்க ஏற்பாடாகியுள்ளது. இதன்படி, 40 கிலோ மீட்டர் வேகமாகவுள்ள வீதிகள் 30 கி. மீ ஆகும். ரொறன்ரோவில் பாதசாரிகளும், சைக்கிள் ஓட்டுநர்களும் வீதி விபத்துகளில் இறப்பதும் காயமடைவதும் அதிகரித்து வருவதால் அதனைத் தடுக்கவே இந்த நடவடிக்கை. இந்த வருடத்தில் கடந்த மாதம் வரை 35 பாதசாரிகள் உட்பட 65 பேர் வீதி விபத்துகளால் மரணமாகியுள்ளனர். கடந்த வருடம் இத்தொகை 29 மட்டுமே.

குளிர்கால 'புளூ' தடுப்பு ஊசி மருந்து ஏற்றும் பணி ஒன்ராறியோவில் ஆரம்பமாகியுள்ளது. சகல குடும்ப மருத்துவர்களிடமும் இதனை ஏற்ற முடியும். அத்துடன் ஒன்ராறியோ மாகாணம் முழுவதுமுள்ள 26,000 மருந்தகங்களிலும் இதனைப் பொதுமக்கள் ஏற்ற முடியும். இதற்கு எவரும் பணம் செலுத்த வேண்டியதில்லை. அவைரும் இதனை ஏற்ற வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளனர். முக்கியமாக சிறுவர்கள், முதியவர்கள், சுவாசப் பிரச்சனையுள்ளவர்கள் தவறாது 'புளூ' தடுப்பு ஊசியை ஏற்ற வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளனர்.

கனடாவின் வருடாந்த குடிவரவாளர்கள் எண்ணிக்கையை ஐம்பது சதவீதத்தினால் அதிகரிக்க வேண்டுமென்று வெளிஆலோசாகர்கள் உயர்மட்டக்குழு செய்த சிபார்சை குடிவரவு அமைச்சர் நிராகரித்துள்ளார். வருடமொன்றுக்கு நான்கரை லட்சம் புதிய குடிவரவாளர்களை இங்கு அனுமதிப்பதற்குத் தேசிய ரீதியாக ஆதரவு பெறுவது கஷ்டம் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். அத்துடன் இந்த ஆலோசனையை அமல்படுத்துவதில் பொருளாதாரச் சிக்கல் ஏற்படுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சாம்சுங் 7- ஸிமாட் தொலைபேசிகளை விமானங்களுக்குள் எடுத்துச்செல்ல கனடாவும் அமெரிக்காவும் தடை விதித்துள்ளன. இரு நாடுகளுக்குமிடையிலான பயணங்களில் மட்டுமன்றி உள்ளூர் விமான சேவைகளிலும் பயணிகள், விமானச் சிப்பந்தகள் எவரும் கொண்டு செல்ல முடியாதென அறிவிக்கப்பட்டுள்ளது.. இந்தத் தொலைபேசிகள் தீப்பிடிக்கும் அபாயமுள்ளதென அதனைத் தயாரிக்கும் தென்கொரிய நிறுவனம் அறிவித்து, அவைகளை மீளப்பெற்று வருவதே இத்தடைக்கான காரணம்.

ரொறன்ரோ பொலிசார் அறிமுகப்படுத்தியுள்ள புதிய சாம்பல் பழுப்பு நிறமுடைய கார்களை ரொறன்ரோ மக்களில் பலரும் விரும்பவில்லை. பெரும்பாலானவர்கள் முன்னைய வெள்ளை சிவப்பு நிற பொலிஸ் கார்களையே அனேகர் விரும்புவதாக கருத்துக் கணிப்பொன்று தெரிவிக்கின்றது. 1980ம் ஆண்டில் மஞ்சள்-வெள்ளை நிற பொலிஸ் கார்களை புதிய நிறத்துக்கு மாற்றும்போதும் இப்படியான கருத்தே இருந்ததாகவும், பழகப் பழக புதிய வர்ணக் கார்களை மக்கள் விரும்புவரெனவும் பொலிஸ் அதிபர் மார்க் சான்டர்ஸ் தெரிவித்துள்ளார்.

## குறமகள் நினைவு நிகழ்வு



கடந்த செப்டம்பர் மாதம் 15ம் திகதி ரொறன்ரோவில் காலமான பிரபல எழுத்தாளரும் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளருமான திருமதி வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) அவர்களின் சேவைகளையும் பணிகளை-யும் நினைவுகூருவதுடன் இணைந்த அவரது ஆத்மசாந்திக்கான நிகழ்ச்சி இந்த மாதம் 12ம் திகதி சனிக்கிழமை, ஸ்காபரோ ஐயப்பன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தினம் பகல் 11 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வில், ஆத்மசாந்திப் பிரார்த்தனை, பஜனை, 'குறமகள் - நினைவழியா நினைவுகள்' கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு ஆகியவைகளையடுத்து மதிய போசனத்துடன் நிகழ்வு நிறைவுபெறும். உறவினர்கள், நண்பர்கள், கலை-இலக்கிய அன்பர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்னாரின் பிள்ளைகள் விருப்புடன் அழைக்கின்றனர். மேலதிக விபரங்களுக்கு:
வாணி - 647 878 2451, பாபு - 647 767 2704.

## கட்சிகள் சார்பில்லாத ஒன்பது செனட்டர்கள் புதிதாக நியமனம்

அரசியல் கட்சிகள் சார்பில்லாத ஒன்பது பேரைப் புதிய செனட்டர்களாக பிரதமர் ஜஸ்டின் ரூடோ கடந்த மாதம் 27ம் திகதி நியமனம் செய்தார். இவர்கள், பிரிட்டிஷ் கொலம்பியா, மனிடோபா, நியுபிரவுண்ஸ்பிக், பிரின்ஸ் எட்வேர்ட் ஐலன்ட், நொவாஸ் - கோஷியா ஆகிய மாகாணங்களைச் சேர்ந்தவர்கள். ஒன்ராறியோ, கியுபெக் மாகாணங்களிலிருந்தும் கட்சிகள் சார்பற்ற தலா ஆறு பேர் விரைவில் நியமனம் பெறவுள்ளனர் தற்போது கன்சர்வேடிவ் கட்சியைச் சார்ந்த 40 பேரும், லிபரல் கட்சியைச் சார்ந்த 21 பேரும், கட்சி சார்பற்றவர்களாக 32 பேரும் செனட்டர்களாகவுள்ளனர்.



குயின்ரஸ் துரைசிங்கம்

# அமெரிக்காவில் அரசியல் யுத்தம் வெல்லப்போவது யார்?

ஒரு வயது வித்தியாசமே கொண்ட இரு துருவங்கள், அமெரிக்க தலைவருக்கான தேர்தலுக்கு முகம் கொடுக்கிறார்கள். 1946 யூன் 14ல் பிறந்த டொனால்ட் ஜோண் ரம்ப் ஒரு வர்த்தக ஜாம்பவான். பென்சில்வானியா பல்கலைக்கழகத்தில் பொருளியல் துறையில் பட்டப்படிப்பை முடித்த ரம்ப், 1977ல் இவானாவையும், 93ல் மார்லாவையும் மணமுடித்து, பின் 2005ல் 1970ல் பிறந்த ஸ்லோவேனியா மாடல் அழகியை மணமுடித்தார்.

1947 ஒக்ரோபர் 26ல் பிறந்த ஹிலாரி டயான் றொதம் கிளின்ரன், புகழ்பெற்ற யேல் (Yale) சட்டக்கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவர். முன்னாள் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் மனைவியாக, முதல் பெண்மணியாக உலகை வலம்வந்த ஹிலாரி, பின்னர் அமெரிக்க அரசியலில் மிக முக்கிய பல பதவிகளை வகித்தவர். ஒபாமா ஆட்சியில் இரண்டாம் நிலை அதிகாரிக்குரிய பதவியான அரசகரும செயலாளராகப் பணியாற்றியவர்.

நவம்பர் 8ம் திகதி நடைபெறவுள்ள அமெரிக்க அதிபர் தேர்தலுக்காக ஹிலாரி கிளின்ரனும் டொனால்ட் ரம்ப்பும் மோதுகிறார்கள். பல பிரமுகர்கள் பங்கேற்ற போட்டி, தற்போது இரு பிரதான கட்சிகளின் போட்டியாளர்களான ரம்ப்-கிளின்டன் போட்டியாக மாறியுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான், சூடான், நைஜீரியா போன்ற பல ஆசிய ஆபிரிக்க நாடுகளில் காணப்படும் மிக மோசமான அரசியல் பிரச்சாரங்களைப்போன்று, தேர்தலில் போட்டி போடுவோரின் தனிப்பட்ட குடும்ப விவகாரங்கள், அவர்களது கணவன் அல்லது மனைவியின் தனிப்பட்ட விவகாரங்கள், இளவயது சில்மிசங்கள், நிதி மோசடிகள் என்று, அனைத்துமே பகிரங்க மேடையில் பேசப்படுகின்ற நிலைமை அமெரிக்க அரசியலிலும் தோன்றியிருப்பது பலரது புருவங்களையும் உயர்த்த வைத்திருக்கிறது.

மெக்சிக்கோவிலிருந்து சட்டத்திற்குப் புறம்பான முறையில், களவாக குடிவரவா-ளர்கள் அமெரிக்காவிற்குள் நுழைவதால் போதைவஸ்து, ஆயுதங்கள், தீய பழக்கங் -களும் வன்முறைகளும் என மிக மோசமான விடயங்கள் நாட்டிற்குள் வருவதால், அதைத் தடுக்க, கற்சுவர் எழுப்பப்போவதாக டொனால்ட் ரம்ப் கூறியதும், இஸ்லாமிய மற்றும் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய குடிவரவாளர்களை முற்றாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், ஏற்கனவே நாட்டிற்குள் வந்திருப்போர் மீதும், வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் நடவடிக்கை எடுப்பேன் என்றும், ரம்ப் கூறிய விடயங்கள் வெளிநாட்டவர்களை அச்சமடைய வைத்துள்ளன. இருப்பினும், அமெரிக்க நாட்டுப்பற்றாளர்களுக்கும் அடிப்படைவாதிகளுக்கும், இந்த அறிவிப்புகள் ஒருவித திருப்தியைக் கொடுத்திருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

ரஷ்யா, சவூதி அரேபியா, ஈரான், சீனா போன்ற நாடுகளுடன் சமாளித்துப் போகும் அமெரிக்க அரசின் போக்கை கடுமையாகச் சாடிவரும் ரம்ப், மிக வலுவான ஒரு நிலைப்பாட்டை எடுத்து, அமெரிக்கா என்ற நாடு, ஏனைய முன்நிலை நாடுகளுக்குப் பயந்து விட்டுக்கொடுத்துப் போகின்ற நிலைப்பாட்டிலிருந்து மாற்றமடைய வேண்டும் என்பதையும் வலிந்து கூறிவருகிறார்.

ஹிலாரி கிளின்ரன், ஏற்கனவே ஜனாதிபதி ஒபாமா நிர்வாகத்தில் முக்கிய பதவி வகிப்பதால், தற்போதைய ஆட்சியைக் குறைசொல்ல முடியாமல், அதேவேளை தான் புதிதாக என்ன மாற்றங்களைக் கொண்டுவரலாம் என்பதை அடித்துக் கூறுவதில் சற்று சிரமங்களைச் சந்தித்து வருகிறார். அதைச் செய்வேன், இதைச் செய்வேன் என்று சொல்லும்போது, அதையெல்லாம் ஏற்கனவே பதவியிலிருக்கும்போது ஏன் செய்யவில்லை என்ற கேள்வியும் எழுவதோடு, அதையெல்லாம் செய்யாமலிருந்துவிட்டு, இப்போது புதியவர் எதையும் செய்யமாட்டார் என்ற தோரணையில் பேசுவதும் மக்களிடம் குழப்பத்தைத் தோற்றுவித்து வருகிறது.

மிகப்பெரிய கோடீஸ்வரரான டொனால்ட் ரம்ப், இதுவரை அரசுக்கு வரி செலுத்தாமல் தப்பித்தது எப்படி என்பது ஒரு மிகமுக்கிய விவாதப் பொருளாக மாறியிருக்கிறது. இளம் வயதில் அங்கும் இங்கும் பெண்களைப்பற்றி மிக மோசமான முறையில் ரம்ப் வழங்கிய விமர்சனங்களும், நண்பர்களுடனான காமுகத்தனமான சல்லாபங்களும் விமர்சனத்துக்குள்ளாகியிருக்கின்றன.

மற்றப்பக்கத்தில், ஹிலாரியின் கணவர் பில் கிளின்ரனின் காமலீலைகள் பலவும் பகிரங்கமாக விவாதிக்கப்படுகின்றன. ஹிலாரி இளவயதாக இருந்தபோது, பில் கிளின்ரனால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டதாகவும், பின்னர் தன்னை களீபரம் செய்த கிளின்ரனையே ஹிலாரி மணமுடித்ததாகவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு -ள்ளது. ஏனைய பெண்களை கிளின்ரன் பலாத்காரம் செய்தமை நிரூபிக்கப்பட்டிருந்தும், அவருடன் தொடர்ந்து குடும்பம் நடத்திய ஹிலாரியின் வாழ்வும், இன்னும் பல நிதி மோசடிகளும்கூட வெளிச்சம்போட்டுக் காட்டப்பட்டுள்ளன.

அமெரிக்க அரசியலில் இதுவரை யாரும் பார்த்திராத - கேட்டிராத - ஏன் நினைத்துக்கூடப் பார்க்காத கேவலமான குடுமிபிடிச் சண்டையும், அவர்களது தனிப்பட்ட குடும்ப ரகசியங்கள் எல்லாம் சந்தி சிரிக்கும் வகையிலான கேவலமான நிலையில் ஒருவரை ஒருவர் மிகக் கேவலமாகச் சாடுவதும் பகிரங்க கவனத்தைப் பெற்று வருகின்றன.

மூன்று பொதுவிவாதங்கள் இடம்பெற்றன. இறுதியாக ஒக்ரோபர் 19ம் திகதி இடம்பெற்ற விவாதத்திற்குப் பின்னர், இரு வேட்பாளர்களும் கடும் போட்டியோடு களத்திலுள்ளனர். ஹிலாரி கிளின்ரனை, 'ஒரு மிக மோசமான பெண்மணி' என்று டொனால்ட் ரம்ப் சுட்டியதும், டொனால்ட் ரம்ப்பை, ஒரு 'ரஷ்ய கைப்பொம்மை' என்று ஹிலாரி சாடியதும், நகைப்பிற்கிடமாகியிருக்கிறது.

நவம்பர் 8ம் திகதி அமெரிக்கத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. உலகில் மிகவும் பலம்வாய்ந்த நாடாகக் கருதப்படும் அமெரிக்காவின் ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறுவார்கள் என்பதை, அமெரிக்க மக்களும் சர்வதேசமும் ஆவலோடு எதிர்பார்த்திருப்பதுடன், சர்வதேச நாடுகள் பலவற்றின் தலைவர்கள் பலரும் மிக உன்னிப்பாக இத்தேர்தல் முடிவுகளைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பல நாடுகளின் அரசியல் மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் அமெரிக்க தலைமையுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதால் சர்வதேச கவனத்தை ஈர்த்துள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலின் முடிவுகள் சிக்கலின்றி 8ம் திகதியே வெளியாகும் என்ற நம்பிக்கை இருந்தாலும், அமெரிக்க தேர்தலில், ஜனநாயகக்கட்சி பல தில்லுமுல்லுகளைச்செய்து வாக்குவேட்டை நடத்துவதாகக் குறைகூறிவரும் டொனால்ட் ரம்ப், ஹிலாரி கிளின்ரன் வெற்றி பெறும் பட்சத்தில், அந்தத் தேர்தல் முடிவுகளை தான் உடனடியாக ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்ற தோரணையிலும் கருத்து வெளியிட்டுள்ள-தால், தேர்தல் முடிவுகள் தாமதமானால் அல்லது நீதிமன்றம் போனாலும் ஆச்சரியப்பட முடியாது.



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# நடுக்கம் என்றால் என்ன?

பனி சூழ்ந்த போதில் கடும் குளிரில் உடல் நடுங்குவதைக் கூறலாம். அதேபோல சில காய்ச்சல்களும் நடுக்கத்துடன் வருவதுண்டு. மலேரியா சிறுநீர்த் தொற்று, செலுலைடிஸ் போன்றவை அதற்கு உதாரணங்களாகும். இந்த வகை நடுக்கத்தை ஆங்கிலத்தில் shivering என்பார்கள். பயத்தினால் நடுங்குவது மற்றொன்று. இவற்றைத் தவிர மற்றொரு நடுக்கமும் உண்டு. விரல்களும் கைகளும் நடுங்குவது. கோப்பை பிடித்தால் கிடுகிடுவென நடுங்கி தேநீர் தரையில் சிந்தும், சேவ் செய்யும்போது கை நடுங்கி சொக்கையை ரணமாக்கிவிடும், சமையலறையில் பாட்டியின் கை நடுங்கி பாத்திரங்கள் பொத் பொத்தென விழுந்து நொருங்கும்.

பொதுவாக வயதானவர்களில் கண்டிருப்பீர்கள். சில நோய்களாலும் வருவதுண்டு. மருத்துவத்தில் tremors என்பார்கள். ஒருவரது விருப்பின்றி தாமாகவே உடலின் சில உறுப்புகள் நடுங்குவதை அவ்வாறு கூறலாம். பொதுவாக விரல்களில் ஏற்படும். வயதானவர்களிலும் நடுத்தர வயதினரிடையேயும் அதிகம் காணப்படும் என்றபோதிலும் எந்த வயதிலும் ஏற்பட வாய்ப்புண்டு. விரல்களில் மாத்திரமின்றி கைகள், தலை முகம் உதடுகள் குரல்வளை உடல் என எங்கும் ஏற்பட வாய்ப்புண்டு.

ஒருவர் தான் அதைச் செய்ய வேண்டும் என்று எண்ணாதபோது அதாவது சுயவிருப்பின்றி அவரது முயற்சியுமின்றி எதிர்பாராது ஏற்படுவதே இத்தகைய நடுக்கம் ஆகும். தசைகளின் அசைவியக்கத்தை கட்டுப்படுத்தும் மூளையும் நரம்பு மண்டலமும்தான் இதற்குக் காரணமாகும்.

மூன்று முக்கிய வகைகள் உண்டு.
முதலாவது வகை ஒருவர் எதுவும் செய்யாது வாழாதிருக்கும்போது ஏற்படும் நடுக்கமாகும் இதை resting tremors என சொல்லுவார்கள். அத்தகைய நடுக்கம் அவர் ஏதாவது செய்ய முனையும்போது தற்காலிகமாகத் தணிவதுண்டு. சாதாரணமாக கை நடுக்கம் உள்ள ஒருவர் எழுத முனையும்போது அல்லது ஒரு பொருளைப் பற்ற முயலும்போது இத்தகைய நடுக்கம் தணியும். இதற்கு முக்கிய உதாரணம் பார்க்கின்சன் (Parkinson's disease) நோயாகும்.

இந்நோயின்போது அவரது இயக்கம் மெதுவாவதுடன் நடையும் தளும்பலாக இருக்கும். சில ஈரல் நோய்கள், நடுமூளையில் பக்கவாதம் போன்றவை ஏனைய காரணங்களாகும்.

வேறு சில நடுக்கங்கள் ஒருவர் ஏதாவது செய்ய முனையும்போது மோசமாகும். இதை Intention tremors என்பார்கள். உதாரணமாக ஒரு பொருளைப் பற்ற முனையும்போது அல்லது எழுத முனையும்போது நடுக்கம் மோசமாகும். மூளையின் செரிபல்லம் பகுதியில் ஏற்படும் நோய்களால் இவை ஏற்படும்.

இன்னும் சில நடுக்கங்கள் எந்நேரமும் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். Action tremors என்பார்கள். இவற்றில் சில ஏதாவது ஒரு புறத்தில் மட்டும் இருப்பதுண்டு. உதாரணமாக இடது கை நடுங்கும் ஆனால் வலது பக்கத்தில் எதுவும் இருக்காது.

நடுக்கங்களில் பல காரணம் சொல்ல முடியாதவை ஆகும். இவற்றில் பல பரம்பரை பரம்பரையாக வருவதுண்டு. காரணம் சொல்ல முடியாத நடுக்கங்களில் பல 65 வயதிற்கு பின்னரே ஆரம்பிக்கும்.
ஆயினும் பரம்பரையில் தோன்றுபவை நடுத்தர வயதிலேயே தோன்றுவதுண்டு. பெற்றோரில் ஒருவருக்கு இருந்தாலே பிள்ளைகளுக்கு வர வாய்ப்புண்டு. ஆனால் எல்லாப் பிள்ளைகளுக்கும் வரும் என்றில்லை. கை நடுக்கம் மட்டுமின்றி தலை ஆடுவது குரல் நடுங்குவது போன்றவையும் பரம்பரையில் வரலாம்.

மருந்துகளால் நடுக்கம்
"எனக்கு நேற்றிலிருந்து கை நடுங்குகிறது" என ஒரு நோயாளி சொன்னார். திடீரென ஏன் ஏற்பட்டது? "ஏதாவது மருந்துகள் புதிதாக உபயோகிக்க ஆரம்பித்தீர்களா" எனக் கேட்டபோது "எனக்கு ஒரு வருத்தமும் இல்லை" என்றவர் சற்று யோசித்துவிட்டு 'இருமல் சிரப் ஒன்று குடித்தனான்' என்றார். ஆம் பல மருந்துகள் நடுக்கங்களுக்கு காரணமாகின்றன. ஆஸ்த்மா நோய்க்கு உபயோகிக்கும் பல மருந்துகள் காரணமாகலாம். Terbutaline. Salbutamol, Theophylline போன்றவை முக்கியமான வை. இம் மருந்துகள் சுவாசக் குழாயை விரிவுபடுத்தி சளி இலகுவாக வெளியேறுவதற்கு உதவுகின்றன. இதனால் பல இருமல் சிரப் மருந்துகளில் குறைந்த அளவில் கலந்துள்ளன.

ஸ்ரோயிட் வகை மருந்துகள் (eg Prednisolone, betamethasone) பலவகையாகும். இவை பல வகை நோய்களுக்கும் உபயோகிக்கப் படுவதுண்டு. இவையும் நடுக்கத்தை ஏற்படுத்தலாம் மருத்துவ ஆலோசனை-யின்றி தானாகவே மருந்தை வாங்கிக் குடித்ததால் அவரைப்போல பலருக்கு நடுக்கம் ஏற்படுவதுண்டு.

வலிப்புநோய்க்கு உபயோகிக்கும் Valporate, மனநோய்களுக்கு உபயோ-கிக்கும் lithium, மனச்சோர்விற்கு உபயோகிக்கும் பல மருந்துகள், சில அன்ரிபயோடிக் மற்றும் அன்ரி வைரஸ் மருந்துகளும் நடுக்கத்தை ஏற்படுத்து-வதுண்டு. பார்க்கின்சன் நோய்க்கு நடுக்கம் ஏற்படும் என்றேன். அதேபோல அந்நோய்க்கு உபயோகிக்கும் Levodopa மருந்தாலும் ஏற்படலாம். தைரொக்சின் மருந்தின் அளவு கூடினாலும் வரலாம். தைரொயிட் சுரப்பி அதிகமாக வேலை செய்யும் நோயிலும் நடுக்கம் வருதுண்டு. இன்னும் பல மருந்துகளால் நடுக்கம் ஏற்படலாம் என்பதால் ஒருவர் தனக்கு புதிதாக நடுக்க நோய் ஏற்பட்டு மருத்துவரிடம்

(32 ஆம் பக்கம் வருக)



அ. முத்துலிங்கம்

# வணங்குவதற்கு ஒரு மண்

புறநானூறில் ஒரு பாடல் உள்ளது. குறுங்கோழியூர் கிழார் சேரமானைப் பார்த்து பாடியது.
'உன்னுடைய மண்ணை கர்ப்பிணிப் பெண்கள் மட்டுமே உண்ணுவர். எதிரிகள் உண்ண முடியாது.'
பழந்தமிழர் சொந்த மண்ணை மாற்றான் அபகரிக்காமல் பாதுகாப்பதற்காகப் போர் புரிந்தார்கள். அதுவே ஒரு வாழ்வுமுறையாக அமைந்தது. மண்ணுக்காக போர்புரிந்து மரித்த வீரர்களுக்கு நடுகல் எழுப்பி அவர்களை வழிபடுவது தமிழர் பண்பாடாகியது.

அமெரிக்காவின் தலைநகரமான வாசிங்டனுக்கு சமீபத்தில் போயிருந்தேன். ஆப்பிரஹாம் லிங்கன் ஜனாதிபதியாக இருந்தபோது ஆர்லிங்டனில் போரில் இறந்த வீரர்களுக்காக ஒரு பிரம்மாண்டமான மயானத்தை அமைத்தார். அதிலே உள்நாட்டுப்போரில் தொடங்கி இன்று ஆப்கானிஸ்தான், ஈராக்கு போன்ற நாடுகள்வரை மரிக்கும் அமெரிக்க வீரர்களை அடக்கம் செய்கிறார்கள். இன்றைக்கு அங்கே 300,000 நடுகல்கள் உள்ளன. வருடா வருடம் மயானத்தில் பெரும் அணிவகுப்பும் மரியாதையும் நடக்கிறது. அத்துடன் பெயர் தெரியாமல் இறந்த வீரர்களுக்கான நினைவு மண்டபமும் ஒன்றிருக்கிறது. வருடத்தில் 365 நாட்களும், இருபத்திநாலு மணிநேரமும் வீரர்கள் காவல் காக்கிறார்கள். தினமும் ஆயிரக் கணக்கானவர்கள் அங்கே நடக்கும் அணிவகுப்பை பார்வையிடுவதற்காக வருகிறார்கள்.

அமெரிக்காவில் மாத்திரமல்ல கனடா, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற பல நாடுகளில் போரில் இறந்துபோன வீரர்களின் சமாதிகளில் வருடாவருடம் மரியாதை நடக்கிறது. ஐரோப்பாவில் பல நாடுகள் வருடத்தில் ஒருநாளை மரித்தவர்களுக்காக ஒதுக்கிவைத்து அந்த நாளில் மயானங்களுக்கு சென்று இறந்தவர்களின் கல்லறைகளை சுத்தம் செய்து பூச்செண்டு வைத்து வழிபடுவதற்கு ஏற்பாடு செய்திருக்கின்றன. மாமன்னன் நெப்போலியன் இறந்து பல வருடங்களுக்கு பின்னர் அவன் உடல் பிரான்சுக்கு கொண்டு வரப்பட்டது. அவன் ஞாபகமாக ஒரு ஸ்தூபி எழுப்பட்டு அதற்கு மக்கள் மரியாதை செய்கிறார்கள். ஆப்பிரிக்காவிலே

இறந்துபோனவர்கள் எல்லாம் தெய்வம்தான். மூதாதை வழிபாடு அவர்களுக்கு முக்கியமானது. இறந்த போர்வீரர்களுக்கான மரியாதை இன்னும் முக்கியம் பெறுகிறது.

1919ம் ஆண்டு நடந்த ஜாலியன்வாலா படுகொலை எல்லோருக்கும் ஞாபகமிருக்கும். மைக்கேல் டையர் என்பவர்தான் அப்போது பஞ்சாப் கவர்னராக இருந்தவன். அந்தப் படுகொலையில் 400 நிரபராதிகள் சுட்டு கொல்லப்பட்டனர். மைகேல் டையர் அந்தக் கொலைகளுக்கு ஆணை கொடுத்தது மட்டுமல்லாமல் அவன் அவற்றை சரி என்று நியாயப்படுத்தியவன். கொலைநடந்த இடத்தில் சனங்களுக்கு தண்ணீர் பரிமாறியவன் உத்தம் சிங். துடிதுடித்து வீழ்ந்து மடிந்த சனங்களை கண்களால் பார்த்தவன். அவன் அந்த இடத்து மண்ணை அள்ளி சட்டைப்பையில் வைத்துக்கொண்டு டையரை பழி வாங்குவதற்காக இங்கிலாந்துக்கு புறப்பட்டான். அங்கே 21 வருடங்களாக அவனைத் தேடி கடைசியில் காக்ஸ்டன் மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றபோது அங்கே பேசவந்த டையரை சுட்டு வீழ்த்தினான். காந்தி அவன் செய்த கொலையை கண்டித்தார். உத்தம் சிங்கை 1940ம் வருடம் இங்கிலாந்தில் தூக்கில் போட்டார்கள். இந்தியா விடுதலை பெற்ற பின்னர் 1974ல் அவனுடைய எச்சங்களை கொண்டுவந்து இந்திய அரசின் ஆதரவோடு எரித்து கங்கையில் கரைத்தார்கள். அன்றைய பிரதமர் இந்திராகாந்தி அந்த நிகழ்ச்சியில் கலந்து மரியாதை செய்தார். இன்றும் உத்தம் சிங்கின் நினைவுச் சின்னத்தை பஞ்சாபில் மக்கள் வழிபடுகிறார்கள்.

கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரேயே இலங்கையில் அநுராதபுரத்தில் தமிழ் மன்னன் எல்லாளனின் நீதியான அரசாட்சி நடந்தது. அவனுடைய ராச்சியத்தை கைப்பற்ற சிங்கள அரசனான துட்டகைமுனு போர் தொடுத்தான். அந்தப் போர் முன்னெப்பொழுதும் கண்டிராதமாதிரி உக்கிரமானதாகவும் கொடூரமானதாகவும் இருந்தது. அந்தச் சமரை மஹாவம்சம் 'குளத்திலிருந்த நீர் எல்லாம் ரத்தச் சிவப்பாக மாறியது' என்று வர்ணிக்கிறது. போரில் துட்டகைமுனு வென்றான் எல்லாளன் இறாந்துபோனான். எல்லாளன் மக்களால் போற்றப்பட்ட தமிழ் மன்னனாகையால் அவன் விழுந்த இடத்தில் துட்டகைமுனு அவன் நினைவாக மண்டபம் எழுப்பினான். அந்த இடத்தை தாண்டும்போது மரியாதை செய்யவேண்டும் என்றும் வாத்தியங்கள் மௌனிக்கப்படவேண்டும் என்று சட்டம் இயற்றினான். அந்தச் சட்டம் பல நூறு ஆண்டுகள் மக்களால் மதிக்கப்பட்டது.

எந்த ஒரு போரிலும் உயிர் நீத்தவர்களுக்கு மரியாதை செய்வதுதான் உயர் பண்பாளர்களின் கடமை. ஆனால் இன்று ஈழத்து போரில் இறந்துபோன வீரர்களின் நடுகல்கள் அழிக்கப்படுகின்றன என்று வருகின்ற செய்தி நம்ப முடியாததாக இருக்கிறது.

புறநானூறில் மாங்குடி கிழார் இப்படி சொல்கிறார்.
மலர்களில் குரவம், தளவம், குருந்தம், முல்லை என்று நான்கு வகை உள்ளன.
உணவில் வரகு, தினை, கொள், அவரை என்று நான்கு வகை இருக்கின்றன.
குடிகளிலும் நான்கு வகை.
ஆனால் தொழுவதற்கு எங்களுக்கு தெய்வம் ஒன்றுதான்.
அது இறந்துபோன வீரனின் நடுகல்.
இன்றோ எமக்கு தெய்வமில்லை.
நடுகல் இல்லை.
ஒரு மண்ணும் இல்லை.



இரா. சம்பந்தன்

# ஈழப் போர் முறையும் இலக்கியப் போர் முறையும்!

நியாயமான கோரிக்கையை முன்வைத்துப் போராடியும் நினைக்க முடியாத தோல்வியைக் கண்ட நிலம் ஈழ நிலம். சிறை நலனும் சீரும் இலர் எனினும் மாந்தர் உறை நிலத்தோடு ஒட்டல் அரிது என்று பேசிய திருக்குறளும் தோற்றுப்போன இடம் ஈழ நிலம். தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும். தருமம் மறுபடியும் வெல்லும் என்ற பாரதியின் வார்த்தையும் தோற்றுப்போன இடம்தான் எங்கள் நிலம்.

போரிலே வென்று இந்திர விழாவாக ஈழமெங்கும் மகிழ்ந்திருக்க வேண்டிய இந்த நாட்கள் இறுகிய முகத்தோடு விளக்கேற்றி நாம் பறிகொடுத்த உயிர்களை உடமைகளை ஏன் உரிமைகளைக்கூட நினைந்து கண்கள் பனிக்கும் நாட்களாக அமைந்து விட்டன. போகட்டும்.

போர் முனையிலே நின்று புண்பட்டு மடிந்தவர்களை நினைவு கூரும் இந்தக் காலத்தில் அவர்கள் கடைப்பிடித்த போர் அறங்களையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். அந்த அறங்களே எங்கள் காயங்களுக்கு இந்த நாட்களில் மருந்தாகி எங்களை எழுச்சி பெறச் செய்யும். போர் அறங்களைத் தூரப் போட்டிருந்தால் ஒருவேளை நாம் ஈழத்தை வெற்றிபெற்று இருப்போமோ தெரியாது.

சங்க இலக்கியத்திலே எட்டுத் தொகை நூல்களில் ஒன்றாக இருந்து இன்றுவரை தமிழரின் வீரத்துக்குச் சான்றாக நிற்கும் நூல் புறநானூறு. அதிலே நெட்டிமையார் என்னும் புலவர் முது குடுமிப் பெருவழுதி என்ற பாண்டிய மன்னன் மீது ஒரு பாடல் பாடியுள்ளார்.

எங்களைப்போல் தோற்று விடாமல் அக்காலத் தமிழர்கள் பகை நாட்டை வென்று விடுகிறார்கள். வெற்றி என்றால் என்ன யுத்த களத்திலே படைகள் முறியடிக்கப்பட்டிருக்கும். மன்னனாக இருந்தவன் கொல்லப்பட்டோ சிறைப்பிடிக்கப்பட்டோ இருப்பான். நாடு ஆட்சி மாற்றத்துக்கு உள்ளாகி இருக்கும். இவை மட்டும் நடைபெற்று இருந்தால் அறம் சார்ந்த யுத்தம் ஒன்று அங்கே நடந்திருக்கின்றது என்று பொருள்.

புலவர் அப்படிப் பாடவில்லை. போரிலே பகை நாடு வெற்றி கொள்ளப்பட்டதும் இன்றைய கார்கள் போல அன்றைய தேர்கள் ஓடிய அந்த நாட்டுத் தெருக்கள் எல்லாம் கழுதைகள் பூட்டி உழப்பட்டு பாவனையில் இருந்து அகற்றப்பட்டன.

அந்த நாட்டு மக்களின் வாழ்வாதாரமான பறவைகள் ஒலி எழுப்பும் வயல்கள் எல்லாம் குதிரைகள் பூட்டப்பட்ட தேர்கள் செலுத்தப்பட்டு நாசம் செய்யப்பட்டன. பறவைகள் ஒலி எழுப்பும் வயல்கள் என்னும் போது நீர் வளம் மிக்க நல்ல வயற்புறங்களில்தான் அது சாத்தியப்படும் என்பதால் சேற்றிலே விவசாயிகளின் பயிர்களோடு சேர்த்து வயல்கள் அழிக்கப்பட்டிருக்க வேண்டும். அப்படி ஒரு கொடுமையைச் செய்தான் புறநானூற்றில் சங்கத் தமிழன்.

அது மட்டுமல்ல. நீர்ப்பாசனத்துக்காக அழகான குளங்களை எல்லாம் அந்த நாடு கட்டி வைத்திருந்தது. அந்த நீர்த் தேக்கங்களில் எல்லாம் யானைகளை ஏவிக் கரைகளை உடைத்து பாழ்படுத்தினார்கள் சங்கத் தமிழர்கள். இதைப் புகழ்ந்து பாடிய சங்கப் புலவன் நெட்டிமையார் இது போல இன்னும் நீ செய்ய வேண்டும் என்று வாழ்த்துவதாக அந்தப் பாடல் காணப்படுகின்றது.

கடுந்தேர் குழித்த ஞெள்ள லாங்கண்
வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டிப்
பாழ்செய் தனையவர் நனந்தலை நல்வெயில்
புள்ளின மிமிழும் புகழ்சால் விளைவயல்
வெள்ளுளைக் கலிமான் கவிகுளம் புகளத்
தேர்வழங் கினைநின் றெவ்வர் தேஎத்துத்
துளங்கியலாற் பணையெருத்திற்
பாவடியாற் செறனோக்கின்
ஒளிறுமருப்பிற் களிறவர
காப்புடைய கயம்படியினை........

(புறநானூறு _ செய்யுள் 15)

இங்கே காட்டப்பட்ட இலக்கிய யுத்தத்தில் அறம் கடைப்பிடிக்கப்படவில்லை. ஒரு மன்னனும் படையும் களத்திலே போர் செய்து தோல்வியடைய பாண்டியன் ஒன்றுமறியாத பகை நாட்டு மக்களுக்குப் பல துன்பங்களைச் செய்தான். ஆனால் இந்த வெற்றியை வரலாறாகப் புறநானூறு போற்றுகின்றது.

நாம் இறுதிப் போரிலே வெற்றி பெறவில்லை. ஆனாலும் இடையிலே பல வெற்றிகளைக் கண்டிருக்கின்றோம். பகை நாட்டுப் பகுதிகளுக்குள் ஊடுருவித் தாக்கியிருக்கின்றோம். எந்த இடத்திலும் ஈழப் படையணிகள் பிற மக்களுக்குத் துன்பம் செய்யவில்லை. கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கூட பயணிகள் முற்றாக வெளியேறும் வரை காத்திருந்து தாக்கினார்கள் இன்று எம்மை விட்டுப் போய்விட்ட வீர மறவர்கள்.

எந்தத் தாக்குதலும் பகை மக்களையோ அந்த மக்களின் உடமைகளையோ சேதப்படுத்தா வண்ணம் திட்டங்களை வகுத்து நாம் போர் செய்தோம். புற நானூறு போல பகை நிலத்தில் புகுந்து குடிகளுக்கு ஊறு செய்திருந்தால் ஒருவேளை இன்று தமிழ் ஈழம் பெற்றிருக்கலாம். அறம் அல்லாத வெற்றியை விரும்பாத ஒரு இனமாக இருந்து பெரும் பாவத்தில் நின்று தப்பிக் கொண்டோம்.

இப்படியெல்லாம் எழுதும் போது இரணைமடு உடைபடவில்லையா? அயல் நாட்டுத் தலைவருக்கு குண்டு வைக்கவில்லையா இவையெல்லாம் அறமா என்று பொங்கியெழும் அறச்செம்மல்களும் நம்மிடையே வாழ்கிறார்கள் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். எமது படையணிகள் களனிப் பாலத்தைத் தகர்க்காமல் விட்டு வைத்ததும் அயல்நாட்டுத் தலைவர் இழைத்த அநீதியில் அவரை மட்டுமே இலக்காக்கிக் கொண்டு அவர் குடும்பத்தைத் தீண்டாமல் விட்டு வைத்ததும் ஆகிய உயரிய யுத்த அறங்களை கைக்கொண்டுதான் எஞ்சியவர்கள் மூலம் பேரழிவுகளை ஏற்றுக் கொண்டார்கள் என்பதை இம் மானுடர்கள் ஒரு போதும் ஏற்கப் போவதில்லை.

எனவே தருமத்தை இறுதிவரை கடைப்பிடித்து நின்று போராடி கிடைத்த வெற்றிகளில்கூட புறநானூறு காட்டும் இழி செயல்களை பிற மக்களுக்குச் செய்து விடாமல் மறைந்த வீரர்களை உறவுகளாகப் பெற்ற நாம் நியாயம் அற்ற வழியில் சொர்க்கம் கிடைத்தாலும் கூட நிராகரிப்பதுதான் அவர்களுக்குச் செய்யும் கைமாறாகும்.



கனகேஸ்வரி நடராஜா

# அந்த ஒரு செக்கன்ட்

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளின் ஒளிபரப்புகள் அண்மையில் தொலைக்காட்சியில் வரும்போது ஒரு செக்கன்ட் எவ்வளவு பெறுமதியானது என்பதை எல்லோரும் உணர்ந்திருப்போம். எத்தனையோ விளையாட்டுப் போட்டிகளில் அந்த ஒரு செக்கன்ட் - ஒரு மிலி செக்கன்ட் என்றுகூடச் சொல்லலாம், ஒருவரின் வெற்றி தோல்வியை இந்த சொற்ப நேர அளவுகளே தீர்மானிக்கிறது. விளையாட்டில் மட்டுமல்ல வாழ்க்கையில்கூட எத்தனை விடயங்களில் ஒரு செக்கன்ட் பெரும் தீர்ப்புகளையும் திருப்பங்களையும் வழங்கி விடுகிறது. ஒரு பாரிய வாகன விபத்திலிருந்து ஒரு நிமிடம் அவ்விடத்துக்கு ஒருவர் பிந்திச் சென்றதால் உயிர் பிழைத்திருக்கலாம். அதேபோல் எத்தனையோ அசம்பாவிதங்களை ஒரு நிமிட இடைவெளியில் தடுத்திருக்கலாம். இவற்றையெல்லாம் பார்க்கும்பொது கடிகாரம் என்ற சிறு கருவியை கண்டுபிடித்தவர்களை மனித குலம் வாழ்த்தியே தீரவேண்டும்.

கடிகாரத்தைக் கண்டுபிடித்து அதன் பன்னிரண்டு மணித்தியாலங்கள் பகற்பொழுது, பன்னிரண்டு மணித்தியாலங்கள் இராப்பொழுது எனக் கணித்து, பின்னர் ஒவ்வொரு மணித்தியாலத்தையும் அறுபது நிமிடங்களாகப் பிரித்து, பின்னர் ஒவ்வொரு நிமிடத்தையும் அறுபது செக்கன்டாக வகுத்து, அப்பப்பா எத்தனை பெறுமதியான கண்டுபிடிப்பு. இன்றைய தேவைகள் கருதி இந்த ஒவ்வொரு செக்கன்ட்கூட மிலி செக்கன்ட் அளவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கடவுள் நேரத்தை மனிதருக்கு வழங்குவதில் பாரபட்சம் காட்டவில்லை. எல்லோர் கைகளிலும் கடவுள் ஒரேயளவு நேரத்தைத்தான் கொடுத்துள்ளார். அதனை நாம் எவ்வாறு உபயோகிக்கிறோம் என்பதில்தான் ஒவ்வொருவரினதும் வாழ்க்கையின் வெற்றி தோல்வி அடங்கியுள்ளது.

எங்கள் நாட்டில் படித்தோம், பட்டங்கள் பெற்றோம், தொழில் பார்த்தோம், குடும்பம் நடத்தினோம், பிள்ளைகளை வளர்த்தோம் மற்றும் எல்லாவற்றையும் செய்தோம். ஆனால் நேரம் இல்லாமல் அவஸ்தைப்படவில்லை. இங்கு வந்தபின்னரே 'நேரமில்லை நேரமில்லை'யென்ற வார்த்தைகளை சிறுவர் முதல் பெரியோர்வரை கூறியபடி உள்ளனர். என்ன பரிதாபகரமான வாழ்க்கை. கடிகாரம்தான் இங்குள்ளோரின் வாழ்க்கையை கட்டுப்படுத்தியவாறு இருக்கிறது. நான் சிறுமியாக இருந்தபோது எங்கள் வீட்டில் ஒரேயொரு சுவர்க்கடிகாரம் இருந்தது. இரண்டடி உயரம், ஒரு அடி அகலமென்று இருக்கலாம். எனது பேரனார் வீடு கட்டிக் குடிபுகுதல் வைத்தபோது யாரோ ஒருவர் பரிசாகக் கொடுத்ததாக அம்மா சொல்லுவா. நடுக்கூடத்தில் அது ஆஜானுபாகுவாகக் காட்சியளிக்கும். ஆனால் கீழ்ப்பகுதியிலுள்ள கண்ணாடிக் கூண்டுக்குள் பெண்டுலம் (Pendulum) டிக் டிக் என ஓசையெழுப்பியபடி ஒய்யாரமாக அசைந்து கொண்டிருக்கும். வாரத்துக்கொருமுறை ஸ்ரூல் ஒன்றின்மேல் அம்மா ஏறி நின்று அதற்குச் சாவி கொடுப்பார். இந்த வேலையை வேறு ஒருவரும் செய்ததாக எனக்கு ஞாபகமில்லை. வீட்டின் எந்த மூலையில் நின்றாலும் ஓடிவந்து மணிக்கூட்டைப் பார்த்தால் நேரம் தெரியும். ஆனால் ஒரு வசதி ஒவ்வொரு பதினைந்து நிமிடத்துக்கும் ஒருமுறை சிறிதாக ஓசையெழுப்பும். பெரிய முள் தனது வட்டத்தை முழுதாக முடித்தபின் பக்கத்து வீடுகளுக்கும் கேட்குமளவுக்கு பெரிய சத்தமாக குறிப்பிட்ட நேரத்துக்குரிய எண்ணிக்கையை அடித்து ஓயும். ஆகவே மணிக்கூட்டைப் பார்க்காமலே நேரத்தை ஓரளவுக்கு நாம் ஊகித்துக் கொள்வோம்.

மணிக்கூடு இல்லாமலே எமது நாட்டில் பலர் வாழ்ந்தார்கள். நல்லூரானின் மணியோசை கணீரென்று எமக்குக் கேட்கும். அதேபோல வெவ்வேறு கோவில்களின் மணியோசையைக் கொண்டு அவ்விடத்து மக்கள் மணியை ஊகிப்பர். பத்து மணி பூசைமணி அடித்தவுடன் அம்மா அடுப்பில் உலை வைத்தது ஞாபகத்திலிருக்கிறது.

யாழ்தேவிச் சத்தம் எத்தனையோ பேருக்கு நேரத்தைக் காட்டிக் கொடுத்தது. "யாழ்தேவியும் வந்தவிட்டது. இனிப் படுப்பம்" என பாயை விரித்தவர்கள் பலரையும் எனக்குத் தெரியும். இலங்கை வானொலியின் நேயர் விருப்பம் நிகழ்ச்சி முடிந்தவுடன் நித்திரைக்குச் செல்வோர் பலரை எனக்குத் தெரியும்.

இன்று சிறுபிள்ளைகள்கூட கைக்கடிகாரங்களை அணிந்து கொள்கிறார்கள். நாங்கள் பாடசாலைக்குச் சென்றகாலத்தில் கைக்கடிகாரம் அணிந்தவர்களை விரல்விட்டு எண்ணலாம். பல்கலைக்கழகத்துக்குச் செல்லும்போதுதான் அந்தப் பாக்கியம் பலருக்கும் கிடைத்தது. சிலர் உத்தியோகம் பார்க்கத் தொடங்கியவுடன் முதல் சம்பளத்தில் கைக்கடிகாரம் வாங்குவது ஒரு பழக்கமாக இருந்தது. சிலர் சிறுகச் சிறுக தாமே ரியூசன் கொடுத்தோ, வளவில் கிடைக்கும் ஏதாவது பிரயோசனங்களை விற்றோ பல நாள் சேகரிப்பில் கைக்கடிகாரம் வாங்குவர். அப்படிப்பட்ட பொருளின் பெறுமதிக்கு நிகரேயில்லை. அன்றைய வாழ்க்கை முறை பெறுமானங்கள் நிறைந்ததாகவும், மனதில் நிறைவைக் கொடுப்பதாகவும் இருந்தது.

இன்று ஒவ்வொரு வீட்டிலும் பார்க்குமிடமெல்லாம் மணிக்கூடுகள் காணப்படுகின்றன. குசினியில், அடுப்பில், மைக்ரோ கதிர் அடுப்பில், தொலைபேசியில், செல்போனில், தொலைக்காட்சியில், கணினியில், வாகனங்களில் என்று எல்லா இடங்களிலும் மணிக்கூடு எம்மைப் பார்த்து கண்சிமிட்டியபடி இருக்கின்றது. இந்நாட்டில் வருடத்துக்கு இருமுறை நேரமாற்றம் ஏற்படும்போது இவை தாமாகவே அந்த மாற்றத்தை ஏற்படுத்தி சரியான நேரத்தைக் காட்டுகின்றன. ஆனாலும் இன்று எல்லோர் கைகளிலும் வகைவகையான கைத்தொலைபேசிகள் கர்ணனின் கவசம்போல இவர்களோடு ஒட்டி உறவாடியபடி இருக்கின்றன. நேரம் என்பதை ஒருவிதமான தேடலுமின்றி சதா கவனித்தவாறு இருக்கிறார்கள். இவர்களின் சோம்பலை அதிகரிக்கும் வகையில் எண்களைக் காட்டும் கடிகாரங்களே (digital clocks) பாவனையில் உள்ளன. தொழில்நுட்ப முன்னேற்றம் வாழ்க்கையை இலகுவாக்குவதோடு சிந்தனையை மந்தகதியாக்கியுள்ளது.

எங்கள் வாழ்க்கையை அளவிடுவதுகூட கடிகாரம் என்றே கொள்ள வேண்டும். மணித்தியாலங்களே நாட்களாக மாறி, நாட்கள் மாதங்களாக மாறி, மாதங்கள் வருடங்களாக உருவெடுத்து எமது வயதை நிர்ணயிக்கின்றன. எத்தனை வருடங்கள் நாம் வாழ்ந்தோம் என்பது பெரிய விடயமல்ல. வருடங்கள் எம்மால் எப்படி வாழ்ந்தன என்பதுதான் முக்கியம். ஆகவே அந்த ஒவ்வொரு செக்கன்டையும் வாழும் பொழுதாக மாற்ற வேண்டும். வாழ்க்கையில் வெற்றி கண்டவர்கள், சாதனை படைத்தவர்கள் எல்லோரும் அந்த ஒவ்வொரு செக்கன்டையும் வீணாகாமல் பார்த்துக் கொண்டார்கள். அதனால்தான் அவர்களால் சாதனையாளர்களாக முடிந்தது. சிறுவயதிலிருந்தே நேரத்தின் பெறுமதியை பிள்ளைகளுக்கு உணரவைத்தல் வேண்டும்.

ப. ஸ்ரீஸ்கந்தன்



# பார்வைப் பகிர்வுகள்

09

## திருமறைக் கலாமன்றம் கட்டிய கலைப்பாலம்

கண்ட காட்சிகள் இன்னமும் கண்முன்னால் களிநடம் புரிந்தவாறுள்ளன. மனதைக் கிளர்த்தி அதில் வாசம் செய்கிறது. ஆட்டமும் பாட்டுமாய் அந்த நிகழ்கலை பார்த்தவர்களை நெருடிவிட்டது. எமது மண்ணின் கலைஞர்கள் மண்ணுள் ஆழப் பரவிக் கிடக்கும் கூத்துக்கலையை மீட்டெடுத்து எம்மையெல்லாம் பரவசத்தில் ஆழ்த்தினர். இந்த அற்புதமான நிகழ்வு கடந்த மாதம் 15ம் திகதி ஸ்காபரோவிலுள்ள ஜேசிஸ் விருந்தினர் மண்டப அரங்கில் நடைபெற்றது. யாழ். திருமறைக் கலாமன்றத்தின் பொன்விழாவை முன்னிட்டும், அதனது கனடாக் கிளையின் வெள்ளிவிழாச் சிறப்பையும் சேர்ந்த இந்நிகழ்வுக்கு தாய்மண்ணின் கலைஞர்கள் வருகை தந்து பெருமை சேர்த்தனர். யாழ். கலாமன்றத்தின் பிரதி இயக்குனர் ஜோன்சன் ராஜ்குமார், கலாமன்றக் கலைஞர்கள் ஜஸ்டின் யூட் தைரியநாதன், ஜெயகாந்தன், வைதேகி செல்மர் எமில், யாழ். பல்கலைக்கழக இசை விரிவுரையாளர் சுகன்யா அரவிந்தன் ஆகியோரே இவ்வாறு சிறப்பித்தவர்கள்.



‘கலைவழி இறைபணி’ என்ற விருதுவாக்குக்கு இணங்க கடந்த ஐம்பது வருடங்களாகக் கலைகளூடாக சமூகத்தில் நல்விழுமியங்கள் பற்றிய விழிப்புணர்வையூட்டியும் தமிழ்க் கலைகளின் பல்வேறு வடிவங்களைக் கட்டிக் காத்தும் பேணி வளர்த்தும் புது மெருகூட்டியும் வந்துள்ளது. மறுபுறம் பேரவலங்களால் பாதிக்கப்பட்ட எமது சமூகத்தை ஆற்றுப்படுத்தியும், பிளவுபட்டு நிற்கும் சமூகங்களை ஒன்றிணைக்கும் பாலமாகவும் திருமறைக் கலாமன்றம் இயங்கி வருகின்றது.

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபகரும் இயக்குனருமாகிய நீ. மரியசேவியர் அடிகள் கடந்த ஐம்பது வருட காலமாக இந்த பெருவிருட்சத்தின் மூலவேராக இயங்கி வருகிறார். ஈழத்துக் கலை இலக்கியப் பாரம்பரியத்தில் நாடக மரபை செழுமைப்படுத்திய மூலவர்களில் முதன்மையானவராக இவர் திகழ்கிறார். பல்வேறு நாடக வடிவங்களையும் புதிய அரங்கியல் நுட்பங்களையும் பயன்படுத்தி வெற்றி கண்டவர். கலை கலைக்காகவே என்று நின்றுவிடாது சமூகத்தின் தேவைகளோடும் பிரச்சனைகளோடும் நெருங்கிய கதைகளைத் தெரிந்தெடுத்து நாடகமாக்கிய துணிவுமிக்க கலைஞர் இவர். நாடக எழுத்தாளராக, நெறியாளராக, பேச்சாளராக, பன்மொழி ஆய்வாளராக விரிந்து செல்லும் இவரது தளம் பெரியது.

அன்றைய நிகழ்வில் உள்ளூர் கலைஞர்களின் ஆடல் பாடல்களோடு ஈழத்திலிருந்து வருகை தந்திருந்த சங்கீத கலைமணி சுகன்யா அரவிந்தனின் இனிய இசை நிகழ்ச்சி முதலில் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து தாய்மண்ணின் கலைஞர்கள் பங்குகொண்ட குசேலர் இசைநாடகமும், அற்றைத் திங்கள் என்ற நாட்டுக் கூத்தும் மேடையேற்றப்பட்டன.

“கண்ணா...” என்று குசேலர் மேடையில் தோன்றி கணீரென்று பாடத் தொடங்கியதும் அவரது குரலின் இனிமையில் சபை கட்டுண்டு போனது. 27 பிள்ளைகளின் தந்தையான குசேலர் தனது வறுமையைப் போக்க தன் பால்ய நண்பனான கண்ணனிடம் சென்ற கதையை இங்கு நாடகமாக்கினர். கண்களைச் சுருக்கி மெல்லிய சிரிப்பை உதிர்த்தபடி சோகம், கோபம், பாசம் என்று அவர் காட்டிய பாவங்கள் அபாரம். சங்கரதாஸ் சுவாமிகளின் அரிச்சந்திர மயானகாண்டம் நாடகத்தின் மெட்டுகளில் இதன் பெரும்பாலான பாடல்கள் அமைந்திருந்தன.

கண்ணனைக் கண்டதும் கட்டிப் பிடிக்கலாமா என்று அவதிப்படுவதும், வந்த விடயத்தைச் சொல்வோமா என்று திணறுவதும் குசேலரின் நடிப்பின் உச்சம். ஜஸ்டின் தைரியநாதன் குசேலராகத் தோன்றியிருந்தார். கண்ணனாக ஜெயகாந்தனும், சுசிலையாக வைதேகியும் நடித்தனர். வெளிநாட்டவர் பணத்தால் யாழ்ப்பாணத்தில் நிகழும் சமூகச் சீரழிவுகளை குசேலர் நாடகம் சுட்டி நின்றது குறிப்பிடத்தக்கது.

நடிகமணி வி.வி. வைரமுத்து அவர்களின் நாடகத்தில் நடித்து, பின்னர் நடிகமணியின் பாத்திரத்தில் தோன்றி எம்மை மகிழ்வித்தவர் கலைஞர் தைரியநாதன். புலிக்குப் பிறந்தது பூனையாகாது என்பதுபோல் அவரது மகனான ஜஸ்டினும் நடிகமணியை எம் கண்முன் நிறுத்தினார். நடிகமணியின் மயான காண்டம் நாடகத்தில் அரியாலையூர் செல்வம் சந்திரமதியாகத் தோன்றினார். இதே செல்வம் அவர்களுடன் மகன் லோகிதாசனாக, தோழியாக, பின்னர் கணவர் அரிச்சந்திரனாக வேடமேற்று நடித்த பெருமை ஜஸ்டின் தைரியநாதனுக்கு உண்டு.

இறுதியாக, அற்றைத் திங்கள் என்ற நாட்டுக் கூத்து அரங்கேறியது. ஜோன்சன் ராஜ்குமார் எழுதி இயக்கிய இந்தக் கூத்தில் அவரே கட்டியக்காரராகவும் கதை சொல்பவராகவும் நடித்திருந்தார். சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் சேர்ந்து குறுநில மன்னரான பாரியைக் கொன்ற இந்தக் கதை முள்ளிவாய்க்காலை எமக்கு நினைவுபடுத்தியது.

கண்டிய நடனமும் வடமோடி ஆட்டமும் கலந்த கலவையாக பாரி மன்னனாக வந்த ஜஸ்டின் மேடையில் தோன்றியதும் ஆடிய ஆட்டமும், பாண்டிய மன்னனாகத் தோன்றிய ஜெயகாந்தன் தலையை வெடுக்கெனத் திருப்பியபடி ஆவேசமாக ஆடிய ஆட்டமும் இன்னமும் கண்களைவிட்டு அகலவில்லை. உள்ளூர் கலைஞர்கள் பலரும் பங்குகொண்ட இந்நாட்டுக் கூத்து பார்வையாளர்களுக்கு பெரும் விருந்தாக அமைந்தது.

மேடையில் பேச்சாளர்கள் சொன்னதுபோல மண்ணின் கலைஞர்களின் கனடிய வருகை ஒரு கலைப்பாலமாக அமைய வேண்டும். அவர்களது வருகை தொடர வேண்டும். இந்த மண்ணில் வாழும் அடுத்த தலைமுறையினருக்கு எமது கலைகளை எடுத்துச் செ(ா)ல்கின்ற பாடமாக இந்தக் கலைப்பாலம் கட்டப்பட வேண்டும்.



பொன்னையா விவேகானந்தன்

# கற்பித்தலில் தாய்மொழிக் கல்வி

20

இத்தொடரில் இதுவரையில் ஆசிரியருக்குரிய பண்புகளையும் பொறுப்புகளையும் பார்த்தோம். கல்வி என்பது பெரிதும் கற்பிப்பவர் வாயிலாகவே நிகழ்த்தப்படுகின்றது. உயர்ந்த சேவையுணர்வும் சமூகம் சார்ந்த ஆழமான ஈடுபாடும் கொண்டோரே இப்பணியில் பெரும் பங்காற்றுவர். இச்சேவையைச் செய்து வருவோர் அல்லது செய்ய முயல்வோர் எவ்வாறு தம்மை வடிவமைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்கான சில முதன்மையான வழிகாட்டல்களை இதுவரை இக்கட்டுரை வழங்கியிருந்தது.

இந்தத் தொடரின் முதன்மையான நோக்கம் தாய்மொழிக் கல்வி தொடர்பானதே. தாயக பண்பாட்டுச் சூழலிலிருந்து பெரிதும் மாறுபட்ட பல்லினப் பண்பாட்டுப் புலத்தில் வேரூன்றி நிரந்தரமாகத் தங்கிவிடத் தலைப்பட்டு விட்டவர்களாகப் புலம்பெயர்ந்த தமிழர்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர்.

காலங்காலமாக மொழிவழியே தமது பண்பாட்டு விழுமியங்களைச் சுமந்தவரான தமிழர், புலம்பெயர்ந்த நாடுகளில் மொழித் தொடர்ச்சியைப் பேணுவார்களா? என்ற வினா இப்போது பெரிதாக எழுந்துள்ளது. புலம்பெயர்ந்தோருடைய எதிர்காலத் தலைமுறையினர் மொழிப்பயன்பாட்டை அல்லது மொழிப் பேணலைக் கைவிடுவார்களேயாயின் எவ்வாறான பேரிடர் இத் - தலைமுறைகளுக்கு ஏற்படக்கூடும்? எனப் பலர் சிந்திக்க ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் மொழிக்கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், ஆசிரியர் பெற்றோருக்கான ஒழுங்கமைக்கப்பட்ட கற்பித்தல் வழிகாட்டல்களைக் கொண்டதாயும் இக்கட்டுரைத் தொடர் அமையவுள்ளது.

புலம்பெயர்ந்தோர் சமூகச் சூழலில் தமிழ்க்கல்வியின் தோற்றம் ஏறக்குறைய கால் நூற்றாண்டைக் கடந்துவிட்டது. இந்தக் கால் நூற்றாண்டில் பாரிய மாற்றங்கள் நிகழ்ந்துவிட்டன. தொடக்ககாலத் தமிழ்ச் சமூகத்தின் உளப்பாங்கு இப்போது இல்லை. வாழும் நாட்டுக்குரிய பண்பாட்டு வடிவங்களை உள்வாங்கிய தலைமுறையினர் தலையெடுத்து விட்டனர். பொருளாதார வளங்களும் வேறு தளத்துக்குச் சென்றுவிட்டன. சமூகத்தவரின் அடிப்படைச் சிந்தனைகளும் தேடல்களும் மாற்றங்களை நோக்கிச் செல்கின்றன.

இச்சூழலில் போதிய கற்பித்தல் அனுபவங்களுடன் கணிசமான மாற்றங்களை உள்வாங்கியிருக்க வேண்டிய தமிழ் கற்பித்தல் துறை, இப்போதும் மரபு வழிபட்ட கற்பித்தல் முறைகளைச் சார்ந்தே நடைபெற்று வருகின்றது. புதிய கற்பித்தல் நுட்பங்களை உள்வாங்குவதில் மந்தமான போக்கைக் கொண்டிருக்கின்றது. மாணவர்களின் பெரு விருப்புக்கும் பெற்றோருடைய முதன்மையான தெரிவுக்குமுரிய துறையாக மாறியிருக்க வேண்டிய தமிழ்க் கல்வி இன்றும் பின்னடைவுற்ற நிலையிலேயே இருக்கின்றது.

எனது 20 ஆண்டுகால கற்பித்தல் அனுபவங்களையும் மொழிக்கல்வி தொடர்பான வல்லுனர்களின் பயிலரங்குகள் வாயிலாகப் பெற்ற கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டு தமிழ்மொழிக் கல்வி பற்றிய என் சிந்தனைகளை இங்கு தொடராகத் தர விரும்புகின்றேன். வேகமாக மாறிக் கொண்டிருக்கும் சமூக அமைவில் எதுவும் நிரந்தரமில்லை. நான் குறிப்பிடுகின்ற கருத்துகள், கல்வியியல் கொள்கைகள் யாவும் மாறிச் செல்லக் கூடியவையே.

தாய்மொழியை இரண்டாம் நிலையில் கற்கும் சூழலின் தோற்றம்: ‘தாய்மொழியைப் பாரம்பரிய மொழியாக முதல் மொழிக்கு அடுத்த நிலையில் கற்றல்’ என்னும் சூழலின் தோற்றம் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே அவதானத்துக்குரியதாக உருக்கொண்டதெனலாம். இக்கல்விச் சூழல் தோற்றம் கொண்டதற்கான பின்புலத்தை நாம் அறிந்திருத்தல் இக்கட்டுரையை முழுமையாக விளங்கிக்கொள்ள உதவும்.

விடுதலைக்குப் பின் பிரித்தானிய, பிரெஞ்சு அரசுகளோடு நெருக்கமான தொடர்பைக் கொண்டிருந்தோரும் மேனாட்டு வாழ்வியற் பண்புகளைப் பெரிதும் விரும்பியோரும் வசதி படைத்த சிலரும் காலனித்துவ ஆட்சியாளருடன் சேர்ந்து வெளியேற விரும்பினர். இவ்வாறு வெளியேறியோர் பிரித்தானிய, பிரெஞ்சு ஆட்சிகள் தொடர்ந்த நாடுகளில் குடியேறி நிரந்தரமாக வாழத் தலைப்பட்டனர்.

ஐரோப்பியரது ஆட்சிக்காலத்தில் வேலை வாய்ப்புகளுக்காக அவர்களது ஆட்சிக்குட்பட்டிருந்த பிறநாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டோர் இருவகையினராவர். கூலித்தொழிலாளிகளாகக் கொண்டு செல்லப்பட்டோர் ஒருவகை. கல்விப் பின்புலம் சார்ந்து தொழில் வாய்ப்புப் பெற்றுச் சென்றோர் மறுவகை. இத்தகையோரும் அந்தந்த நாடுகளில் நிரந்தரமாகத் தங்கிவிட்டனர்.

விடுதலைக்குப் பின்னரும் கல்வி தொழில் வாய்ப்புகளுக்காக வளர்ச்சியுற்ற நாடுகளுக்குச் செல்வோரும் இருந்தனர். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உள்நாட்டு யுத்தங்கள், இயற்கைப் பேரழிவுகள் காரணமாக அகதிகள் என்ற பகுப்பில் கணிசமானோர் ஐரோப்பிய, வடஅமெரிக்க, அவுஸ்திரேலிய நாடுகளில் குடியேறினர். இத்தகையோரும் குடியேறிய நாடுகளில் நிரந்தரமாகத் தம் வாழ்வை அமைத்துக்கொண்டனர்.

இவ்வாறு குடியேறியோர் தமது முதற் தலைமுறையின்போது தாய்மொழியிலேயே பெரிதும் தமது தொடர்பாடலைக் கொண்டிருந்தனர். அவர்களது சிந்தனா மொழியாகவும் தாய்மொழியே இருந்தது. மொழியாலும் பண்பாட்டாலும் பழக்கவழக்கங்களாலும் முற்றிலும் மாறுபட்ட ஒரு புலத்தில் வாழத்தலைப்பட்ட ஓரினத்தினுடைய தனித்துவ இயல்புகளில் மாற்றங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

குடியேறியோரது இரண்டாம் தலைமுறையே இவ்வாறான மாற்றங்களை பெரிதும் பிரதிபலிப்போராக இருந்தனர். குடும்பம் என்ற சிறு வட்டத்துக்கு அப்பால் இரண்டாம் தலைமுறையினரின் சமூக மொழியாகவும் தொடர்பாடல் மொழியாகவும் அந்தந்த நாடுகளுக்குரிய மொழியே ஆதிக்கம் பெற்றுச் சிந்தனா மொழியாகவும் திகழ்ந்தது. அவர்களது தாய்மொழி இரண்டாம் மொழி என்னும் நிலையை அடைந்தது. இந்நிலையில்தான் முதல்மொழியை அடுத்து, தாய்மொழியை பாரம்பரிய மொழியாக இரண்டாம் நிலையில் கற்கும் சூழல் தோற்றம் கொண்டது.

இச்சூழல் தமிழருக்கு மட்டும் உரியதன்று. ஆசிய, ஆபிரிக்க தென்னமெரிக்க, கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தோருக்கும் பொருந்தும்.



கனடா மூர்த்தி

# கண்டதைச் சொல்கிறேன் 38

எழுக தமிழ் குறித்த வாதப்பிரதிவாதங்கள் சென்ற மாதம் முழுவதுமே முகப்புத்தகத்தில் எப்படி எப்படியெல்லாமோ தொடர்ந்து கொண்டிருந்தன. 'பயங்கரவாத தடைச் சட்டத்தை நீடிக்க வைப்பதற்கான விளையாட்டு எழுக தமிழ்', 'மேற்குலக நாடுகள் நடத்தும் நாடகமே இந்த எழுக தமிழ்', 'சி.வி அவர்களின் இந்துத்துவ நிலைப்பாட்டின்வழி இந்து அடைப்படை-வாதிகளின் வேலையே இந்த எழுக தமிழ்', 'இராணுவ முகாம்களை அகற்றாமல் இருப்பதற்கான காரணத்தை காட்டுவதற்கான நாடகம் எழுக தமிழ்', 'இந்திய அரசின் ஆசீர்வாதத்தோடு அரங்கேற்றப்பட்ட நாடகமே எழுக தமிழ்", 'தம் விருப்பப்படி காய் நகர்த்துவதற்கான சிங்களத்தின் தந்திரமே இந்த எழுக தமிழும், தமிழ் மக்கள் பேரவையும்' என்றெல்லாம் பல்வேறு கருத்துகள் முகப்புத்தகத்தில் இடப்பட்டி-ருந்தன. கூடவே அவை தொடர்பில் விவாதங்-கள் எழுந்து, வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் ஆதரவுக் கருத்துகளாகவும், ஸ்ரீலங்கா எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தனின் ஆதரவுக்கருத்துகளாகவும் நிலையெடுத்து முட்டியும் கொண்டன.

எழுக தமிழ் நிகழ்வை விமர்சித்து எழுதிய கனடாத் தமிழ் ஒலிபரப்பாளர் ஒருவர் *"தமிழர் தரப்பு கோரிக்கைகளுக்கான நியாயங்கள் குறித்து தமிழர்களை விழிப்பு-ணர்வூட்டி என்ன பயன்? அந்த நியாயங்களை விளங்காத முட்டாள்களாகவா தமிழர்கள் இத்தனை தசாப்தங்களாக வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்? அந்த நியாயங்களை சிங்கள மக்களுக்குப் போய் தெளிவுறுத்துவதே பிரதான கடமை"* என்று ஆலோசனை சொல்லியிருந்தார். அந்த ஆலோசனையை அதேவேகத்தில் நான் விமர்சித்தேன். *"அந்த நியாயங்களை விளங்காத முட்டாள்களாகவா சிங்களவர்கள் இத்தனை தசாப்தங்களாக வழிநடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்ற கேள்வியும் உங்களுக்கு எழ வேண்டும் நண்பரே... சிந்தித்துப் பார்த்தால், சிங்களவர்களில் இருந்து யாராவது போய் அந்த நியாயங்களை சிங்கள மக்களுக்கு தெளிவுறுத்துவதுதான் இன்றைய காலகட்டத்-தின் பிரதான கடமை! அதை அவர்கள் செய்யாததால்தான் விக்கினேஸ்வரன் காலத்தின் கட்டாயமாக அமையும் தமிழ்த் தலைவராகுகிறார். சிறுபான்மை இனங்களுக்-கெனத் தனியே ஓர் குணமுண்டு என்பதை மறக்க வேண்டாம்"* என்று பதிவிட்டிருந்தேன்.

எழுக தமிழ் நிகழ்வு இலங்கையின் தென் பகுதியில் ஏற்படுத்திய எதிர்ப்பலையில் முதன்மைக் கவனம் பெற்றவைகளில் ஒன்று பொதுபல சேனையின் பொதுசெயலாளர் ஞானசார தேரர் தமிழர்கள் இலங்கையை விட்டு வெளியேறி இந்தியாவிற்குப் போய்விட வேண்டும் என்று சொன்ன அதியற்புத யோசனைதான். அதற்கு ஒருவர் *"எம்மை இந்தியாவுக்கு அனுப்புங்கள் அங்கிருந்து வந்த புத்தரையும் சேர்த்து..."* என்று திருப்பியடித்தார்.

ஸ்ரீலங்காவின் தமிழ் அமைச்சர் மனோ கணேசனும் கடுப்பாகி *'இந்நாட்டில் வாழும் தமிழர்களை இந்தியாவுக்கு விரட்டியடிக்க வேண்டிவரும் என ஞானசார தேரர் கூறியுள்ளார். இந்தியாவுக்கு அனுப்புவதானால், இங்கே வாழும் சிங்களவர், தமிழர் எல்லோரும்தான் இந்தியா போக வேண்டும். நான் போகத் தயார். ஆனால், தனியாக போக மாட்டேன். அவரையும்கூட அழைத்துக்கொண்டுதான் இந்தியா போவேன். நாட்டை வேடர்களிடம் ஒப்படைத்துவிட்டு எல்லோரும் இந்தியா போகலாம்!"* என தன் முகப்புத்தக வழி தெரிவித்தார்.

மனோ கணேசனின் கூற்றை மறுத்து *"சிங்கள இனம் இலங்கையில் தோன்றியதே கி.மு ஆறாம் நூற்றாண்டுக்குப் பின்னரே. ஆனால் அந்த இனத்தைத் தோற்றுவித்த விஜயன் வரும்போது இயக்கர்களும் நாகர்களும் இருந்ததாகவும் அவர்களில் நாகர்கள் சற்று நாகரிக வளர்ச்சி பெற்றிருந்ததாகவும் சிங்கள வரலாற்று நூல்களே ஒத்துக்கொள்கின்றன. இந்நிலையில் இயக்கர் நாகர் கோத்திரத்தின் வழிவந்த வடக்குக் கிழக்கு தமிழ் மக்கள் தேரரின் கருத்துப்படியும் அமைச்சரின் கருத்துப்படியும் எதற்காக இந்தியா போகவேண்டும்? இலங்காபுரியை ஆண்ட பெருவீரன் இராவணனை அவர் மறந்துவிட்டாரா?"* எனப் பதிவிட்டார் வேறொருவர்.

யாழ்ப்பாணத்தில் நடந்த ஒரு இசை நிகழ்ச்சியும் பல வாதப்பிரதிவாதங்களை முகப்புத்தகத்தில் எழுப்பியது. புலம்பெயர்ந்தோர் மட்டுமல்ல, அங்கிருக்கும் பலரும்கூட அந்த இசைநிகழ்ச்சியை, நிகழ்ச்சிக்குச் சென்றவர்களை, நிகழ்ச்சி நடத்தியவர்களை, நுழைவுச்சீட்டு கட்டணத்தையெல்லாம் விமர்சிக்கத் தலைப்பட்டனர். அந்த விமர்சனங்களை விமர்சித்து ஒருவர் *"நடந்தது ஒரு இசை நிகழ்ச்சி... அதன் பின்புலத்தில் என்ன அரசியல் காரணம் இருந்தாலும் ரசிக்க போனவனை மட்டம் தட்டாதே... அவனிடம் எந்த அரசியல் நோக்கமும் கிடையாது!"* எனப் பதிவிட்டார். *"இலங்கைத் தமிழர்கள் அன்றுமுதல் இன்றுவரை இந்தியக் கலைஞர்களோடு ஒன்றி வாழ்பவர்கள். குறிப்பாக தமிழ்நாட்டிலுள்ள கலைஞர்களின்றி இலங்கைத் தமிழர்களால் வாழவே முடியாது. இலங்கை வானொலி தமிழ்ச்சேவை இரண்டு தொடக்கம் இன்றுவரை இயங்கும் அத்தனை வானொலிகளும் இந்தியப் பாடல்கள் இல்லாவிட்டால் இயங்கவே முடியாது"* என்றார் இன்னொருவர். *'தங்கத்தலைவி உயிருக்கு போராடிட்டு இருக்கும்வேளை யாழ்ப்பாணத்தானுக்கு சினிமா பாட்டு ஒரு கேடா? எஸ்பிபி, கங்கை அமரனுக்கு அம்மா அவர்கள் வைச்சு செய்யணும் என கேட்டுக்கொள்கிறேன்.!"* என நகைச்சுவையாக இன்னொருவர் ஜெயலலிதாவை இதனுள் வேண்டுமென்றே இழுத்தார்.

ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நாளிலிருந்து தமிழ் முகப்புத்தக உலகும் அதீத பரபரப்பாகிக் கொண்டது என்பதையும் இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும். ஜெயலலிதா நலம்பெற வேண்டி அதிமுக தொண்டர் ஒருவர் தீக்குளித்து மரணமானாரல்லவா... அந்தச் செய்திக்கு *"ட்ரீட்மெண்ட் குடுக்க வந்த லண்டன் டாக்டர்க்குக்கூட இப்படி பண்ணா ஜெயலலிதா உடல்நிலை சரியாகும்ன்னு தெரியாது.."* என தீக்குளிப்பை வேதனையுடன் கிண்டல் செய்தார் ஒருவர். இடையிடையே ஜெயலலிதா மரணமானதாக ஒரு வதந்தியும் முகப்புத்தகத்தால் அதிக அளவில் பரப்பப்பட்டுக் கொண்டிருந்தது. *"எப்படியாவது ஜெயலலிதா மரணித்தே இருக்கவேண்டும் என சிலர் படும் மனப்போராட்டம் மிகக்கொடியது.!"* என அதைக் விமர்சித்தார் ஒருவர். பிரான்ஸில் வாழும் தமிழ்ப் பெண்மணி ஒருவரின் முகப்புத்தகம் உட்பட பல்வேறு சமூக வலைத்தளங்களால் பரபரப்பாக்கப்பட்ட இந்த வதந்தியைத் தடுக்க தமிழக அரசு *'வதந்தி பரப்புவோரைக் கைது செய்து ஜெயிலில் வைத்துவிடுவோம்'* என்று கடுமையாக மிரட்டியிருந்தது. அதை நகைச்சுவையாக கிண்டல் செய்திருந்த ஒருவரின் முகப்புத்தகப் பதிவைக் கீழே தருகிறேன்.

*"எதுக்குடா பள்ளிக்கூடத்திற்கு வரல்ல" என்று ஆசிரியர் கேட்க "லட்சுமி செத்துட்டா" என்கிறான் மாணவன். "யாருடா லட்சுமி?" என்று ஆசிரியர் கேட்க "எங்க அம்மாதான்" என்கிறான் மாணவன். "அட முட்டாப்பயலே.. அம்மா செத்துட்டாங்க என்று சொல்லவேண்டியதுதானே..." என்று ஆசிரியர் அதட்ட மாணவன் பயந்து பயந்து சொல்கிறான் "அம்மா செத்துட்டா என்று சொன்னா கைது பண்ணி ஜெயிலில போட்டுடுவாங்களாம்."*

# ஹாவர்ட் பல்கலைக்கழக தமிழ் இருக்கைக்கு அக்னி அரங்கில் ஐம்பதாயிரம் டாலர்கள்









ஹாவர்ட் பல்லைக் கழகத்தில் அமையவிருக்கும் தமிழ் இருக்கைக்கு நிதி சேகரிப்பதற்கான இசையுடன் நடனமும் கலந்த நிகழ்ச்சியொன்றை கனடாவின் அக்னி இசைக்குழுவினர் கடந்த மாதம் ஸ்காபரோவில் நடத்தினர். இந்த நிகழ்ச்சியின் ஊடாகச் சேகரிக்கப்பட்ட நிதியுடன் பல புரவலர்களும் வழங்கிய நிதியும் சேர்த்து மொத்தம் ஐம்பதாயிரம் டாலர் சேகரித்து தமிழ் இருக்கை அமைப்பதற்கு வழங்கப்பட்டது.

# வடமாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரன் இங்கிலாந்தில் ‘இரட்டை நகர்’ ஒப்பந்தம்





வடமாகாண சபைக்கும் இங்கிலாந்தின் கிங்ஸ்ரன் நகர சபைக்குமிடையில் கடந்த மாதம் ‘இரட்டை நகர்’ ஒப்பந்தமொன்று உருவாக்கப்பட்டது. இதில் ஒப்பமிடுவதற்காகவும், வடமாகாண அபிவிருத்தி- பொருளாதார நடவடிக்கைளில் பங்கெடுப்பதற்காகவும் வடமாகாண முதலமைச்சர் சி. வி. விக்கினேஸ்வரன் இங்கிலாந்துக்குச் சென்றிருந்தார். ‘இரட்டை நகர்’ ஒப்பந்த நிகழ்வின்போது எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்கள் இங்கே.

# கனடிய புதிய சட்டவாளர் றிஷானி வெற்றிவேலின் அறிமுக வரவேற்பும் ஒன்றுகூடலும்







கனடாவின் புதிய சட்டவாளராகப் பணியை ஆரம்பித்துள்ள றிஷானி வெற்றிவேல் அவர்களை வரவேற்கும் ஒன்றுகூடல் நிகழ்வொன்று கடந்த மாதம் 12ம் திகதி ஸ்காபரோவிலுள்ள 'மார்க்கம் விருந்தினர்' மண்டபத்தில் பல்துறைப் பிரமுகர்கள் கலந்துகொண்ட நிகழ்வாக நடைபெற்றது. வீடு விற்பனைத்துறையில் சமூகத்தில் நன்கறியப்பட்டவரான HomeLife Future Realty நிறுவன அதிபர் திரு. செல்வா வெற்றிவேல்-தேவி தம்பதியரின் மூத்த புதல்வியான றிஷானியின் சட்ட அலுவலகம் ஸ்காபரோ மில்னர் வீதியில் அமைந்துள்ளது. இவரது வரவேற்பு ஒன்றுகூடலின்போது எடுக்கப்பட்ட சில ஒளிப்படங்களை இங்கு காணலாம்.

# கனடா யாழ். இந்துவின் கலையரசி விழா






கனடாவிலுள்ள யாழ். இந்துக் கல்லூரி மாணவர் அமைப்பின் வெள்ளி விழாவுடன் இணைந்த கலையரசி விழா கடந்த மாதம் மார்க்கம் தியேட்டர் அரங்கத்தில் நடைபெற்றது. ஹாவர்ட் பல்கலைக் கழக தமிழ் மொழி விரிவுரையாளர் திரு. ஜொநாதன் றிப்லி இங்கு தமிழில் சிறப்புரையாற்றினார். இந்துவின் பழைய மாணவரான யாழ்ப்பாண கல்வித் திணைக்கள உடற்கல்வி பிரதிக்பணிப்பாளர் திரு. சண்முகம் தயாளன் பிரதம விருந்தினராகக் கலந்து நிதர்சனமான உரையொன்றை நிகழ்த்தினார் வேறு உரைகளும் வாத்திய இசை, நடனம், நாடகம், பாட்டு ஆகிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.




# கனடா திருமறைக் கலாமன்ற வெள்ளி விழாவும்
# யாழ். திருமறைக் கலாமன்ற பொன்விழாவும்
## மண்ணும் புலமும் இணைந்த அற்புதக் கலைமாலை








தாயகக் கலைஞர்களுக்கு 'தமிழர் தகவல்' மதிப்பளிப்பு

கனடிய மண்ணில் புதிய கலைப்பாலம் அமைத்த திருமறைக் கலாமன்ற விழாவில் தாயகக் கலைஞர்கள் மேடையேற்றிய குசேலர், மற்றும் அற்றைத் திங்கள் ஆகிய கூத்துகளின் சில காட்சிகள் இப்பக்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தாயகத்திலிருந்து வந்திருந்த இசைக் கலைமணி சுகன்யா அரவிந்தனின் இசை நிகழ்ச்சியுடன் கூத்துகள் ஆரம்பமாகின. விழா பற்றிய விபரமான கட்டுரையை பத்தாம் பக்கத்தில் படிக்கவும்.







# யாழ். மாவட்ட சாரணர் நூற்றாண்டு விழாவில் கனடிய ஞாபகார்த்த முத்திரை வெளியீடு





யாழ். மாவட்ட சாரணர் சங்கத்தின் நூற்றாண்டு வைபவம் அண்மையில் யாழ். இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. மேற்படி கல்லூரியின் சாரணர் சங்க சர்வதேச இணைப்பாளர் திரு ஆர். ஆர். ராஜ்குமார் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். வடமாகாண சபையின் தவிசாளர் திரு. சி.வி. கே. சிவஞானம், மாகாண அமைச்சர் பொ. ஐங்கரநேசன் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் இதில் பங்குபற்றினர். கனடிய தபால் வெளியீட்டகத்தினால் அச்சடிக்கப்பட்ட யாழ். மாவட்ட சாரணர் நூற்றாண்டு சிறப்பு முத்திரையை திரு. ராஜ்குமார் இங்கு வெளியிட்டு வைத்துப் பிரமுகர்களிடம் கையளித்தார். சாரணர் இயக்கத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்களும், யாழ். மாவட்ட பாடசாலைகளின் சாரணர் அமைப்புப் பிரதிநிதிகளும் இதில் பெருமளவில் பங்குபற்றினர்.

# ஆய்வாளர்கள் இருவரின் ஆவண நூல்கள் வெளியீடு









தமிழீழ அரசியல் ஆய்வாளர்களும் கட்டுரையாளர்களுமான மு. திருநாவுக்கரசு மற்றும் அ. யோதிலிங்கம் ஆகியோரின் ஆவண நூல்கள் வெளியீட்டு விழா கடந்த மாதம் 8ம் திகதி ரொறன்ரோவில் நடைபெற்றது. மு. திருநாவுக்கரசு எழுதிய ஒரு நூலும், அ. யோதிலிங்கம் எழுதிய மூன்று நூல்களும் இங்கு அறிமுகம் செய்யப்பட்டு ஆய்வுரைகள் நிகழ்த்தப் பட்டன. யோதிலிங்கம் நேரடியாக விழாவில் கலந்து சிறப்புரை வழங்கினார். திருநாவுக்கரசு அவர்கள் இந்தியாவிலிருந்து நேரலை வழியாகப் பதிலுரை வழங்கினார்.

# இலங்கைத் தமிழரின் வரலாற்றுச் சுவடுகள் நூல் வெளியீடு






வல்வை வரலாற்று ஆவணக் காப்பக வெளியீடான இலங்கைத் தமிழரின் வரலாற்றுச் சுவடுகள் என்னும் தமிழ் மற்றும் ஆங்கிலத்திலான நூல்களின் வெளியீட்டு விழா கடந்த மாதம் 8ம் திகதி ஸ்காபரோ நகர மண்டபத்தில் நடைபெற்றது. நகுலசிகாமணி தம்பதிகளின் புதல்வர்கள் சந்துரு மற்றும் சௌமியன் ஆகியோரின் பத்தாவதாண்டு நினைவாக இந்நூல்கள் வெளியி டப்பட்டன. விழாவின் சில காட்சிகள் இங்கு.

# தமிழர் தகவல் 26வது ஆண்டு பூர்த்தி மலர்

## கட்டுரைகள் நவம்பர் 14 திங்கட்கிழமை வரை ஏற்கப்படும்

கனடாவின் மூத்த தமிழ் இதழான தமிழர் தகவலின் 26வது ஆண்டு பூர்த்தி மலர் வேலைகள் இப்போது துரிதமாக நடைபெற்று வருகின்றது.

2017 பெப்ரவரியில் நடைபெறும் 26வது ஆண்டு விருது விழாவுடன் இணைந்ததாக மலர் வெளியீடும் இடம்பெறும். கனடிய நாட்டின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய தகவல் பதிவாக தமிழர் தகவல் வருடாந்த மலர்கள் வெளிவருவதை அனைவரும் அறிவர். எனவே அவ்வகையான அம்சங்களைக் கொண்டதாக நீங்கள் அனுப்பும் கட்டுரைகள் அமைய வேண்டும். சிறுகதை, நாவல், கவிதை என்னும் ஆக்க இலக்கியங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. ஆனால், இவைகளை மையப்படுத்திய ஆய்வுப் படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.

அனைத்து ஆக்கங்களும் இந்த மாதம் (நவம்பர்) 14ம் திகதி திங்கட்கிழமைக்குப் பிந்தாமல் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும். இத்திகதி நீடிக்கப்படமாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

தமிழர் தகவலின் மின்னஞ்சல் முகவரி: tamilsinfo@sympatico.ca
தபால் முகவரி: Editor in Chief, Tamils' Information, P. O. Box - 3, Station - F, Toronto, ON. M4Y 2L4.

# தாய்வீடு அரங்கியல் விழா


## 'அகவெளிப் பொய்கள்' நாடகம்


கலைஞர் பொன்னையா விவேகானந்தனின் ஆக்கத்தில் உருவான 'அகவெளிப் பொய்கள்' சமூக நாடகம், புலம்பெயர் தமிழர் வாழ்வியிலின் மையக்கூறொன்றை தேடல் வழியாகச் சித்தரிப்பது. டிலிப்குமார், அ. கந்தசாமி, கந்தசாமி கங்காதரன், மாலா விவேகானந்தன், பிரதாஜினி சந்திரகுமார் ஆகியோர் இந்நாடகத்தில் பங்கேற்றவர்கள்.

## 'இன்று போய் நாளை வா' கூத்து

இலங்கை வேந்தனின் இராமாயணத்தில் வரும் கும்பகர்ணன் வதை படலத்தை 'இன்று போய் நாளை வா' என்ற மகுடத்தில் கூத்து வடிவத்தில் இங்கு மேடையேற்றினர். ஜோன்சன் ராஜ்குமாரின் மூலக்கதையை செல்வம் அருளானந்தம் மீள்பிரதியாக்கமும் நெறியாள்கையும் செய்து மேடையேற்றினார். ரெஜி மனுவேல்பிள்ளை, அசோக் மைக்கல்ராஜா, பாவனி சிவகுமரன் ஆகியோர் முக்கிய பாத்திரமேற்று வெகுசிறப்பாக நடித்திருந்தனர். நீண்ட காலத்துக்குப் பின்னர் தரமான ஒரு நாட்டுக்கூத்தைப் பார்த்து ரசித்த மகிழ்ச்சியில் அவையோர் காணப்பட்டனர்.









# தாய்வீடு அரங்கியல் விழா

## ஆடலகம் நடனப்பள்ளியின் 'மெய்யோடு மெய்யாகி' தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் நாட்டிய நாடகம்











கடந்த மாதம் 2ம் திகதி மார்க்கம் தியேட்டரில் இரண்டு அமர்வுகளாக இடம்பெற்ற தாய்வீடு அரங்கியல் விழாவின் முதலாவது நிகழ்வாக மேடையேறியது, 'மெய்யோடு மெய்யாக' நாட்டிய நாடகம். ஆடலகம் நடனப்பள்ளியின் ஆசிரியையும் நிறுவனருமான நாட்டியக் கலைமணி அனோஜினி குமரதாசனின் ஆக்கம் - இசைத்தொகுப்பு - நெறியாழ்கை ஆகியவற்றில், அவரோடு அவரது பத்து மாணவிகள் பங்கேற்ற இந்நிகழ்வு அவையோரின் பலமான பாராட்டுதலைப் பெற்றது. தொல்காப்பியத்தின் நகை, வியப்பு, அழுதல், அச்சம், இளிவரல், சினம், பெருமிதம், மகிழ்ச்சி ஆகிய மெய்ப்பாடுகளினதும் 32 வகை உணர்வுகளை நுட்பமாக, வசனங்களேதுமின்றி முற்றுமுழுதாக இசை வடிவத்தில் 40 நிமிடங்களைக் கொண்டதாக இந்நாட்டிய நாடகம் அமைக்கப்பட்டிருந்தது. சின்னஞ்சிறு சிறுமிகளிலிருந்து அனைவருமே மிக லாவகமாக தங்கள் பாத்திரத்தையும் தொல்காப்பியக் கூறுகளையும் உணர்ந்து காட்சிளாக்கி ரசிகர்களைத் தம்வசப்படுத்திக் கட்டி வைத்திருந்தது இதன் அதியுச்ச சிறப்பம்சமாகும். இந்நிகழ்வின் சில காட்சிகளை இங்கு காணலாம் (ஒளிப்படங்கள்: செய்தி - குணா)












RE/MAX
Ace Realty Inc., Brokerage
Each Office Independently Owned and Operated

3-1286 Kennedy Road
Toronto, ON M1P 2L5

Bus: 416-270-1111
Cell: 416-801-3219
Email: skbales@hotmail.com
Web: www.skbales.com

**S.K. BALES, CRA, MVA, FRI, CRES.**
Broker & Canadian Residential Appraiser

CHAI

**Canadian Home Appraisal Inc.**

14 Clementine Sq.
Toronto, ON Canada M1G 2V7
www.chainc.ca

Bus: 416-438-2200
e-mail: skbales@hotmail.com

MMUCC

# Markham McNicoll Urgent Care Centre

**416.609.3333 www.mmucc.ca**

2901 Markham Road, Unit #11, Scarborough, ON. M1X 0B6



## மருத்துவ சேவைகள்

- வெளி நோயாளர் பிரிவு ( Walk in Clinic )
- விரைவு மருத்துவம் ( Urgent Care )
- குடும்ப மருத்துவம் (Family Practice)
- ஆய்வு கூட வசதி (Lab Services for our Patients only)

## எமது மருத்துவ நடுவத்திலுள்ள பிற மருத்துவ சேவைகள்



- மருந்தகம் ( Pharmacy)
- இயன் மருத்துவம் ( Chiropractic, Massage Therapy & Physiotherapy) )
- பல் மருத்துவ சேவை (Dental Clinic)
- கண் மருத்துவ சேவை (Optometry)
- மற்றும் பிற மருத்துவ சேவைகள் (Many more Medical Services)

*** ஆண்டின் 365 நாட்களும் திறந்திருக்கும்**

Developed and Managed by :

MEDCENTRE CONNECT

SYNCHRONIZING HEALTH SECTORS




மார்க்கம்
மக்நிக்கல்
சந்திப்பில்
அமைந்துள்ளது.

# Markham McNicoll Family Clinic

**416.292.6666**

2901 Markham Road, Unit # 7 , Scarborough, ON. M1X 0B6

MMFC FAMILY CARE

குடும்ப மருத்துவர்கள்

டாக்டர் சுகந்தி இரவீந்திரன் B.Sc, MD, ABFM

டாக்டர் சிந்துலா விஜயா MD, CCFP

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவர்

திங்கட்கிழமை முதல் சனிக்கிழமை வரை மருத்துவ நிலையம் திறந்திருக்கும்

Developed and Managed by :

MEDCENTRE CONNECT

SYNCHRONIZING HEALTH SECTORS




மார்க்கம் மக்நிக்கல் சந்திப்பில் அமைந்துள்ளது.


உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது
உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும்
இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்
Chapel Ridge
FUNERAL HOME INC.
PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS
8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1
Chapel Ridge
Chapel Ridge
Call :
Vilosan Sivatharman B.Eng
முதலாவது கனடியத்தமிழ் Funeral Director
416 993 0826
Call :
Christeen Seevaratnam
Funeral Counsellor
416 258 6759
எங்களுடைய சேவைகள் மார்க்கம் / மிஸிஸாகா (Dundas & Cawthra) பகுதிகளுக்கு விஸ்தரிக்கப்பட்டுள்ளது

# WALK-IN CLINIC

**@ 1200 Markham Rd.**



**தமிழில் உரையாடி மருத்துவச் சேவையை பெற்றுக்கொள்ள**

Mon - Wed: 10 am - 4 pm
Thu - Fri: 10 am - 8 pm
Sat - Sun: 10 am - 3 pm

**no appointment required**

**7 OPEN DAYS**

# 416.289.1212

# MedCheck Clinic

**1200 Markham Road, Unit #115**
**Scarborough, ON M1H 3C3**

**(*at* Markham & Ellesmere)**

Pharmacy, Medical laboratory, X-Ray facilities are on premises



வீடு வாங்க... விற்க... உங்கள் பிரதிநிதி

**Rave P. Raveenthiran**
Sales Representative

**HomeLife/Future**
Realty Inc. Brokerage
Independently Owned and Operated

205-7 Eastvale Drive,
Markham, ON L3S 4N8
**Dir: 416-567-2462**
Tel: 905-201-9977
Fax: 905-201-9229
ravehomes@gmail.com

HOMELIFE HIGHER STANDARDS

**ATTIC INSULATION**

கோடை காலத்தில் குளிராக்கும் செலவினை குறைக்கவும்
குளிர் காலத்தில் வெப்பமாக்கும் செலவினை குறைக்கவும்
கூரை உக்குதல். பூஞ்சணம் பிடித்தல் போன்றவற்றை தடுக்கவும்
பரண் (ATTIC) உள்ளீடு செய்திடுங்கள்!!!

Stay Warm in Winter. Be Cool in Summer.

**Spray Foam Insulation**

Attic Walls
Ceiling Garage
Crawl Space



**SuPa. Raventhiran**
**416-847-7171**
ENERecon Insulation



SABESAN'S Choice

We design and build your dream homes

**Additions and Custom build homes**





“நீங்கள் விரும்பும் இல்லம் அமைத்திட”
**சபேசன்**
விருதுகள் பெற்ற நிபுணர்
**416 605 1990**

Custom made
Solid Wood
Kitchen Cabinets
Flooring
Granite counter-tops...



Financing available *OAC



எஸ். ராஜ்மோகன்

## பணிலமாடம் 27

# மூளைக்கு வயதில்லை!

கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் இருக்கும். Markham & Steeles சந்தியில் உள்ள றோயல் வங்கியின் முன்னால் நின்ற தமிழர் ஒருவர் எனது பிறந்தநாளைக் கூறும்படி கேட்டார். எதற்கு இவர் பிறந்தநாளைக் கேட்கின்றார் என்று யோசிக்கமுன் "உங்கள் பிறந்தநாளைக் கூறுங்கள் அதை என்றைக்கும் ஞாபகப்படுத்திக் கொள்வேன்" என்று கூறினார். தயங்காமல் எனது பிறந்தநாளைக் கூறி விடைபெற்றுக்கொண்டேன். இந்த சம்பவத்திற்கு பின்னர் அண்மையில் அதே தமிழரை தற்செயலாக மீண்டும் சந்திக்க நேர்ந்தது. "அண்ணா எப்படி இருக்கிறீர்கள்" என்று ஆரம்பித்த அவர் எனது பிறந்தநாளை சரியாகக் கூறி வியப்பில் ஆழத்திவிட்டார். மிகுந்த ஆவலுடன் அவரிடம் பேசியபோது பல சுவாரஸ்யமான விடயங்கள் தெரியவந்தன.

அவரது பெயர் பாஸ்கரன் கிட்டிணசாமி. ஸ்காபரோவில் வசிக்கின்றார். கனடிய உணவகம் ஒன்றில் கடமை புரியும் இவரின் வயது 52. இந்த மனிதர் அண்ணளவாக 5000க்கும் மேற்பட்டவர்களின் பிறந்தநாள் மற்றும் தொலைபேசி இலக்கங்களை இலாவ-கமாக தனது மூளையின் களஞ்சியத்தில் பத்திரமாகச் சேமித்து வைத்திருக்கின்றார். இது எப்படி உங்களுக்குச் சாத்தியமா-கின்றது என்றபோது, நான் சந்திக்கும் நபர்களின் முகத்துடன், அவர்களது பிறந்தநாளையும் தொலைபேசி எண்ணையும் தொடர்புபடுத்தி மூளையில் பதிந்து கொள்வதாகக் கூறுகின்றார். தினமும் காலையில் எழுந்தவுடன், அன்று பிறந்தநாள் கொண்டாடும் நபரின் முகம் மனத்திரையில் தெரிவதாக மேலும் கூறுகின்றார். தனது 27ஆவது வயதில் இருந்து இவற்றைச் சேகரித்து வருவதாக கூறும் இவர் அதிகம் சாப்பிடுவது வல்லாரை, பொன்னாங்காணி, முருங்கையிலை மற்றும் நெல்லிக்காய் என்பது மேலதிக தகவல்.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து, முதுமையில் கல்வி மணலில் எழுத்து' என்பது இக்காலத்திற்குப் பொருத்தமில்லாததொன்று. மூளையின் நினைவாற்றலுக்கும் நமது வயதுக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்கின்றது மருத்துவ ஆராய்ச்சிகள். நாம் எவ்வளவுக்கு எவ்வளவு மூளையை பயன்படுத்துகின்றோமோ அந்த அளவைப் பொறுத்தே எமது ஆளுமையின் அதிகரிப்பும் காணப்படும். ஒரு விடயத்தையோ அல்லது தகவலையோ மீளாய்வு செய்வதற்கு மூளையில் பின்வரும் மூன்று படிமுறைகள் இடம்பெற வேண்டும். தகவல் பதிவு, தகவல் சேமிப்பு மற்றும் தகவல் மீளாய்வு. இந்த மூன்று விதமான படிமுறைகளில் ஏதாவது ஒன்று பாதிப்படையும்போது அந்தத் தகவலை நாம் இழந்துவிடுகின்றோம். இவ்வகையான பாதிப்புகள் ஒவ்வொரு மனிதனுக்கு ஒவ்வொரு விதமாக வேறுபடுகின்றது. இந்த வேறுபாட்டுக்கான அடிப்படைக் காரணம் மூளைக்கு நாம் கொடுக்கும் பயிற்சிகள் (Brain Fitness) ஆகும். இதற்கென பிரத்தியேகமான பயிற்சி முறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.
மனிதனின் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட வயதெல்லையின் பின்னர் மூளையின் விருத்தி இறுதி நிலையை அடைவதாக முன்னர் கருதப்பட்டது. ஆனால், மூளையின் விருத்திக்கு இறுதி நிலை இல்லை என்பது நிரூபிக்கப்பட்டுள்ள ஒரு விடயம். ஒரு பேராசிரியர் ஒருவரின் மூளை திடீரென ஏற்பட்ட மாரடைப்பினால் முழுமையாக சேதமடைந்து, பதிவு செய்யப்பட்டிருந்த அனைத்து தகவல்களையும் இழந்துவிடுகின்றது. பேராசிரியர் அனைத்து விடயங்களையும் மறந்து வெறுமையான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டார். அவரது மூளையில் பலத்த தாக்கம் ஏற்பட்டதாகவும் அவரது முதிர்ச்சியின் காரணமாக அவரது மூளையில் எதுவித மாற்றமும் ஏற்படச் சாத்தியமில்லை என மருத்துவர்கள் கையை விரிக்கின்றனர்.


அந்தப் பேராசிரியரின் மகன் அப்போது மருத்துவபீட மாணவனாக இருந்தான். தந்தையின் இந்தப் பரிதாப நிலையை அவனால் தாங்கிக் கொள்ள முடியாமல் தனது தந்தையை அமெரிக்காவில் இருந்து, தான் மருத்துவம் படித்துக்கொண்டிருந்த மெக்சிக்கோவுக்கு அழைத்து சென்றான். அங்கு சென்ற நாள் முதல் தனது தந்தைக்கு தகவல்களை ஒரு குழந்தைக்குக் கற்றுக்கொடுப்பது போல் ஆரம்பத்தில் இருந்து கற்றுக்கொடுத்தான். பேராசிரியர் படிப்படியாக பல விடயங்களை அறிந்து சாதாரண நிலையை அடைந்தார். சில வருடங்களின் பின்னர் தனது 77வது வயதில் பூரண ஆரோக்கியத்துடன் மலையேறும்போது மீண்டும் மாரடைப்பு வந்து இறந்துவிட்டார். இவரது இறப்பை அடுத்து அவரது மூளை பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது பேராசிரியரின் மூளையில் புதிய கலங்கள் விருத்தி அடைந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டது. இதன் மூலம் மூளையானது ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பின்னர் மாற்றம் அடையமாட்டாது என்ற கருத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

மூளையின் பயிற்சி மூலமாக மூளையின் செயற்திறனை நாம் அதிகரிக்க முடியும் என்று நிருபிக்கப்பட்டுள்ள நிலையில் எமது அன்றாட கடமைகளை மூளையின் வளர்ச்சிக்குரிய சில பயிற்சிகளுடன் தொடர்புபடுத்தி வாழ்ந்து வந்தால் அதுவே எமது முன்னேற்றத்தின் அடிப்படையாகவும், இளமையின் ரகசியமாகவும் இருக்கும்.

கல்லூரி ஒன்றிற்கு வந்திருந்த ஒரு ஆசிரியர் வகுப்பில் உள்ள அனைவரிடமும் ஒரு கேள்வி கேட்கச் சொன்னார். வகுப்பில் இருந்த அனைவரது கேள்விகளையும் கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்தார். எல்லோரும் கேள்வி கேட்டு முடித்த பின்னர் அனைத்துக் கேள்விகளையும் ஒவ்வொன்றாக சொல்லி, பதிலையும் விளக்கினார். இது எப்படி சாத்தியம் என்று அவரிடம் ஒரு மாணவன் கேட்டபோது அதற்குரிய பதிலாக ஒவ்வொரு கேள்விகளையும் மாணவர்களுடைய உருவத்துடன் தொடர்புபடுத்தி மூளையில் பதிவு செய்து, சேமித்து வைத்து, கேள்விகளை மீளாய்வு செய்ததாகவும் இது மூளையின் பயிற்சி மூலமாகவே சாத்தியமாகும் எனறும் குறிப்பிட்டார்.

மூளைக்குக் கொடுக்கும் பயிற்சி ஞாபகசக்தியை அதிகரிக்கும். ஆனால் சில நேரங்களில் சிலவற்றை மறக்கவும் பழகிக்கொள்ளவேண்டும்.

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு




On high, with your thoughts

PROMAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்

இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5













கோவில் மாலைகள் மற்றும் பூஜை பொருட்கள்

5633 Finch Ave East, Unit # 6, Scarborough, ON M1B 5K9
(416) 288-1419

சொரி பூக்கள், சரம் மற்றும் பூஜைக்கு தேவைப்படும் இலை வகைகள்

| | | | |
|---|---|---|---|
| இறக்குமதி செய்யப்பட்ட கதம்ப சரம் | $ 2.00/ M | அறுகம் புல் | $ 3.00/bag |
| உள்ளூர் கர்னேஷன் சரம் | $ 2.00/M | வில்வம் இலை | $ 3.00/bag |
| மல்லிகைப்பூச்சரம் | $ 5.00/M | வேப்பிலை | $ 3.00/bag |
| கர்னேஷன் மலர்கள் | $ 0.20 each | Marukhalundu /Maru | $ 3.00 /bag |
| மல்லிகை மலர்கள் | $ 5.00/bag | மாவிலை | 10 per $ 1.00 |
| சம்பாகினி மலர்கள் | $ 3.00 /bag | வெற்றிலை | 10 per $ 1.00 |
| அரலி மலர்கள் | $ 3.00 /bag | வாழை இலை | $ 1.00 each |
| தாமரை மலர்கள் | $ 1.00 each | துளசி இலை | $ 3.00/bag |

Fancy Florist

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்' சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - SATURDAY**

**(416) 266-5161**


(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



‘சிந்தனைப் பூக்கள்’ எஸ். பத்மநாதன்



# பெண்களுக்கான சிறந்த நகரங்கள்

கனடாவில் பல விடயங்கள் எல்லோராலும் அறிந்து கொள்ளப்படாதவை. பெண்கள் எப்படியான நகரங்களில் வாழ்வதற்கு விரும்புகின்றனர் என்று ஓர் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. கேற் மக்கின்றர்ப் என்ற கனடாவின் கொள்கை மாற்றத்துக்கான ஆய்வாளரது அறிக்கை இதில் முதன்மை பெறுகிறது.

இங்குள்ள 25 நகரங்களில் பொருளாதாரப் பாதுகாப்பு, தனிப்பட்ட பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம், உயர் பதவிகள், வியாபாரம் எல்லாவற்றையும் கணக்கிலெடுத்து இந்த ஆய்வு மேற்கொள்ளப் - பட்டுள்ளது. இதற்கான 25 நகரங்களில் நாட்டின் சனத்தொகையில் 67 வீதத்தினர் வாழ்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பெண்களுக்கான சிறந்த நகரம் பிரிட்டிஷ் கொலம்பியாவிலுள்ள விக்டோரியா என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆண்களுக்கு இணையான வேலை வாய்ப்பு மற்றும் எல்லாவித தரங்களிலும் இது முதன்மை பெறுகிறது. இங்கு நகர முதல்வர்கூட ஒரு பெண்மணியே. அரசியலிலும் அவர்களின் நிலை உயர்வாக உள்ளது.

இரண்டாவது இடத்தில் வந்துள்ள கிங்ஸ்ரன் நகரம் கனடாவின் தலைந-கரமாக ஆரம்பத்தில் இருந்ததுடன், குயின்ஸ் பல்கலைக்கழகத்தையும் பெண்களுக்கான கல்வி நிலையங்களையும் கொண்டுள்ளது. இங்கு ஆண்களின் ஆயுட்காலம் சராசரி 78. ஆனால் பெண்களின் ஆயுட்காலம் 83 ஆகும்.

மூன்றாவதாக வந்துள்ள ஒன்ராறியோ லண்டனில் பெண்கள் ஆண்களுக்கு இணையான தொழில் வசதிகளில் உள்ளனர். சம்பள இடைவெளியும் மிகக்குறைவு. நான்காவதாக கியுபெக் நகரம் பெண்களுக்கான சிறந்த இடமாகியுள்ளது. இங்கு தேசிய சராசரி சம்பளத்தைவிட ஆண் பெண் இருவருக்கும் சம்பள விகிதம் அதிகமாகும். 63 வீத பெண்களும் 67 வீத ஆண்களும் இங்கு வேலை செய்கின்றனர். கியுபெக்கிலுள்ள கற்றினோ நகரம் பெண்களுக்கான கூடிய கல்வித் தரத்தை கொண்டது. தொழிற்பயிற்சியில் இங்கு பெண்கள் முதலிடத்திலுள்ளனர். மாநகரசபை தேர்தலிலும் மூன்றிலொரு பங்கினர் இங்கு பெண்கள்.

ஆறாவது இடத்தைப் பெற்றுள்ள மொன்றியல் கனடாவின் மூன்று பெரிய நகரங்களிலொன்று. அரசாங்கப் பதவிகளிலுள்ள பெண்கள் இங்கு அதிகம். கியுபெக்கிலுள்ள சேபுறூக் என்ற நகரம் பெண் கல்வியில் மிகவும் தரமானது. உயர்கல்வித் துறையில் பெண்களே அதிகம். பெருமளவு பெண்கள் இங்கு வர்த்தகத் துறையில் ஈடுபட்டுள்ளனர். சென். ஜோன்ஸ் நகரம் நியுபவுன்லாந்து - லபிரடோர் மாகாணத்திலுள்ளது. பெண்களுக்கான நகர்களில் இது பதினைந்தாம் இடத்திலிருந்து எட்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளது. நான்கு பெண்களில் ஒருவர் கல்லூரி அல்லது சி.ஈ.ஜி.ஈ.பி. பட்டம் பெற்றுள்ளனர். வைத்திய வசதி காரணமாக ஆண்களின் சராசரி வயது 71 ஆகவும் பெண்களின் சராசரி வயது 81 ஆகவும் உள்ளது.

அடுத்த கட்டுரையில் பெண்களுக்கான சிறப்பற்ற நகரங்களைப் பார்ப்போம்.

# தமிழர் மரபுரிமை மாதமாக தைத்திங்கள் தீர்மானம்

கனடாவில் தை மாதத்தை தமிழர் மரபுரிமை மாதமாக அங்கீகரிக்கும் தீர்மானம் கடந்த மாதம் (அக்டோபர்) 5ம் திகதி கனடிய நாடாளுமன்றத்தில் சகல கட்சிகளினதும் ஆதரவுடன் நிறைவேற்- றப்பட்டது. ஸ்காபரோ றூஜ்பார்க் நாடா- ளுமன்ற உறுப்பினரால் இத்தீர்மானம் முன்மொழியப்பட்டது.

மார்க்கம் நகரசபை, ரொறன்ரோ நகரசபை உட்பட ரொறன்ரோ பெரும்பாகத்தின் பல நகரசபைகள் ஏற்கனவே தைத்திங்களை தமிழர் மரபுரிமை மாதமாக ஏற்றுப் பிரகடனம் செய்துள்ளன. ஒன்ராறியோ மாகாண அரசாங்கம் இதனை ஒரு சட்டமாக இரு வருடங்களின் முன்னர் நிறைவேற்றியது.

சமூகச் செயற்பாட்டாளர் நீதன் சண் தலைமையில் இயங்கும் இருபதுக்கும் அதிகமான தமிழர் அமைப்புகளைக் கொண்ட கனடிய தமிழர் மரபுரிமைச் சபை கடந்த ஐந்து ஆண்டுகளாக தமிழர் மரபுரிமை மாதமாக தை மாதத்தை பிரகடனம் செய்து இம்மாதத்தில் பல நிகழ்ச்சிகளை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# குழந்தைகளின் ஆட்டிசம் குணப்படுத்தும் ஆய்வு

ஆட்டிசம் எனப்படும் கற்றல் குறைபாடு கொண்ட குழந்தைகளின் இரண்டரை வயது முதல் பெற்றோர் அவர்களிடம் உரையாடும் விதத்தின் மூலம், அவர்களின் குறைபாடு அறிகுறிகளின் தீவிரத்தை கணிசமாக குறைக்க முடியும் என்று பாதிக்கப்பட்ட குழந்தைகளிடம் நடத்தப்பட்ட ஆய்வொன்று தெரிவித்துள்ளது.

மிதமானது முதல் கடுமையான ஆட்டிச குறைபாடுள்ள குழந்தைகளிடம் எவ்வாறு நடந்து கொள்வது மற்றும் அவர்களின் வினாக்களுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்று பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பெற்றோருக்கு லண்டன் கிங்ஸ் கல்லூரி ஆராய்ச்சியாளர்கள் தலைமையில் பயிற்சியளிக்கப்பட்டது.

வழக்கமான சிகிச்சை முறைகளை காட்டிலும், ஆராய்ச்சியாளர்கள் கற்றுக் கொடுத்த சிகிச்சை முறைகளை பின்பற்றிய போது, கடுமையான ஆட்டிச அறிகுறிகள் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கையில் 15 சதவீத அளவுக்கு குறைந்துள்ளது கண்டறியப்பட்டுள்ளது

கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
Canadian Tamils Remembrance Organization
www.tamilremembrance.com, CTRO@tamilremembrance.com - (647) 980-5219

# அறிவித்தல்.

மாவீரர்களின் பெற்றோர்களையும் குடும்பத்தினரையும் மதிப்பளிப்புச் செய்யும் உன்னதமான நாளை முன்னிட்டு கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம், மாவீரர் தொடர்பான விபரங்களையும், மாவீரர் பெற்றோர் சகோதரர்கள் தொடர்பான விபரங்களையும் திரட்டுகின்றது.

கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர்களின் குடும்பத்தினர் தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரரின் குடும்பத்தினர், புதிய தொலைபேசி இலக்கத்தைப் பயன்படுத்தும் மாவீரர் குடும்பத்தினர் அனைவரும் தங்களது முகவரி, தொலைபேசி இலக்கம். போன்ற விபரங்களைத் தந்துதவுமாறு அன்போடு கேட்டுக் கொள்கின்றோம்.

---

## மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள் 2016

மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள், எதிர் வரும் 20.11.2016 ஞாயிற்றுக் கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகி, மதியம் 2.00 மணி வரை நடைபெறும் என்பதைக் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் அறியத் தருகின்றது.

மாவீரரை வணங்கும் மகத்துவம் மிக்க கார்த்திகை மாதத்தில் நடைபெறும் மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாளுக்கு மாவீரர்களின் பெற்றோர்கள், குடும்பத்தினர், உணர்வாளர்கள் அனைவரையும் வருகை தருமாறு அன்புடன் அழைக்கிறது கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.

தொடர்பு இலக்கம். (647) 980 5219.

**ctro@tamilrembrance.com**

மண்டப முகவரி.

**Metropolition Centre,**

**3840 Finch Ave. E**

**M1T 3T4.**



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# கார்த்திகேசு ஐயரும் கார்த்திகைப் பூக்களும்

***கடந்த ஆகஸ்ட் மாதம் காலமான ஆழ்கடலான் முருகவே பரமநாதன் அவர்கள் முற்கூட்டியே எழுதித் தந்த பல கட்டுரைகளிலிருந்து...***

மலர்கள் யாவரையும் தம்பால் ஈர்ப்பன. இவை பூசை செய்யவும் பயன்படும். கவினார் அழகும் இயற்கையும் அனைவர் உள்ளங்களையும் ஈர்ப்பன. பூக்களில் நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ, கோட்டுப்பூ என பலவகையுண்டு. நீர்ப்பூக்கள் எழிலானவை. இவை இரவிலும் பகலிலும் மலரும். றோசாப்பூபோல தாமரையும் மக்களால் விரும்பப்படும் ஒன்று.

வைச சமயமும் வைணவமும் பூக்களை பூசைக்குப் பயன்படுத்துவன. இயற்கையாகவே மாலைபோல் அமைந்திருப்பது கொன்றைப்பூ. இதனைத் தனிமலராகவும் பயன்படுத்தலாம். மாலை கட்டவும் பயன்படுத்தலாம். புலிநகக் கொன்றையென்றும் ஓர் இனமுண்டு.

பொதுவாக எல்லாப் பூக்களுமே பூசைக்கு உகந்தவை. மூன்று இலைகளைக் கொண்ட மாவிலங்கை பெரிதும் விரும்பப்படுபவை. நாவலரின் வினா-விடையில் புஷ்ப விதி பற்றி விபரமாகச் சொல்லப்பட்டுள்ளது. சிவனுக்கு வேறு பூக்கள், முருகனுக்கு வேறு பூக்கள். துளசியும் வில்வமும் நீண்டகாலம் பயன்படுத்தக்கூடியவை. குளிர்சாதனப் பெட்டியில் வைத்தும் கனடா போன்ற நாடுகளில் இவை பயன்படுத்தப்படுகின்றன.

மலர்கள் வரிசையில் கார்த்திகைப்பூ மிகமிக மேலானது. கார்த்திகை மார்கழி மாதங்களில் இது மலரும். மெல்லிய கொடி அமைப்புடையது. வயல் வரம்புகளிலும் செடிகொடிகளுக்கிடையிலும் பூமரங்களை அண்டியும் இவை இயற்கையாக வளரும். இவற்றை நாம் நட்டு வளர்ப்பதில்லை. ஒருவகைக் கிழங்கிலிருந்து இது முளைக்கும். இதனை ஆலயங்களில் பயன்படுத்துவது புஷ்ப விதிக்குட்பட்டது. வல்லிபுரக் கோவிலுக்கு அண்மையில் குருக்கட்டுச் சித்திவிநாயகர் கோவில் அமைந்துள்ளது. இங்கு பூசைக்கு கார்த்திகைப் பூக்கள் நிறையப் பயன்படும். மக்கள் இப்பூவை ஆலயத்துக்கு எடுத்துச் சென்று கொடுப்பர். கண்கவரும் வர்ணங்களாலான இயற்கை அழகுடைய இம்மலரை ஐயர் அக்கறையுடன் பெற்று பூசைக்குப் பயன்படுத்துவார்.

மதிப்புக்குரிய இம்மலருக்கு உரிய மதிப்பளிப்பார் ஆலயத்தின் கார்த்திகேசு ஐயர். அவர் வரும்போதே தம்முடன் இப்பூக்களைக் கொண்டு வருவார். வல்லிபுர ஆலயத்தின் மார்கழி நீராட்டு விழாவுக்கு கார்த்திகைப் பூ நிரம்பவே பயன்படும்.

இவ்வாறு போற்றப்படும் கார்த்திகைப் பூ சங்க இலக்கியங்களிலும் இடம்பெற்றுள்ளது.
முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
கருவுறுக லிங்கம் கழாஅது ஓடீஈ
குவளை உளர்கண் குயப்புகை கழுமத்
தானது ளந்து அட்டதீம் பொழிப்பாக
இனிது எனக் கணவன் உண்டபின்
துள்ளிதின் மகிழ்ந்தன்று ஒளிர்காணுதல்
என்று குறுந்தொகை கூறுகிறது.

ஐந்து விரல்கள் கார்த்திகைப் பூ போன்றன. எழிலார் மலர்போன்ற காதலி ஒருத்தியின் விரல்கள் கார்த்திகை மலர் போன்றன. பஞ்சவர்ண பட்டுப் போன்ற பட்டாடையென்றும் பாராமல் தயிரைப் பிசையும் அழகே அழகு. புளிச்சாதமும் சிறப்பே. அதனைச் சுவைத்து உண்ட கணவனின் திவ்வியமுகம் நளினப்படுத்தியமை இப்பாடலில் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.





குரு அரவிந்தன்

# சின்னத்தம்பிப் புலவர்

சின்னத்தம்பிப் புலவர் யாழ்ப்பாணம் நல்லூரில் 1716ஆம் ஆண்டு பிறந்ததாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இவரின் தந்தையான வில்லவராய முதலியார் முன்னொரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் தலைநகராக இருந்த நல்லூரில் வாழ்ந்தவராவார். நாகநாதர் வில்லவராயர முதலியார் யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னான சிங்கை பரராசசேகரனின் (1478-1519) வழித்தோன்றலாவார். செல்வந்தரான வில்லவராய முதலியார் ஈகையிலும் சிறந்து விளங்கியவர். ஒல்லாந்தர் தங்கள் ஆட்சிக் காலத்தில், மன்னராட்சிக் காலத்தில் இருந்த சட்டமும் ஒழுங்கும் மற்றும் யாழ்ப்பாணத் தமிழரின் பாரம்பரிய பழக்க வழக்கங்கள் பற்றிய விபரங்களை வில்லவராய முதலியாரைக் கொண்டே ஆவணப்படுத்தினார்கள். பின்னாளில் தேசவழமைச் சட்டத்தை (1707) உருவாக்குவதற்கு இதுவே முக்கிய ஆவணமாகக் கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணத் தமிழரையும், அவர்களது பாரம்பரிய நிலங்களையும் பாதுகாக்கும் முக்கிய சட்டமாக இது இன்றும் நடைமுறையில் இருக்கின்றது.

வில்லவராய முதலியாரின் விருப்பத்திற்கிணங்க அவரது வீட்டிலே சமகாலத்தில் வாழ்ந்தவரும், கல்விமானுமாகிய கூழங்கைத் தம்பிரான் அவர்கள் வித்தியாகாலட்சேபம் செய்து வந்தார். கூழங்கைத் தம்பிரான் தமிழ் இலக்கண இலக்கியங்களிலும் சித்தாந்த சாத்திரங்களிலும் மிக்க பாண்டித்தியமுடையவர். சிவபக்தரான கூழங்கைத் தம்பிரான் அவர்கள் காலட்சேபத்தின்போது, பாடல்களைப் படித்துப் பொருள் சொல்லி வருவது வழக்கம். தினமும் படித்த பாடல்களை எல்லாம் ஏழு வயதாய் இருந்த சின்னத்தம்பிப் புலவர் கவனமாகக் கேட்டு அவதானம் பண்ணி உடனே அவ்வாறே ஒப்பித்து விடுவார்.

சிறு வயதிலேயே ஒரு பாடலை அவதானம் செய்து அதை அப்படியே பாடக்கூடிய திறமை அவரிடம் இருந்தது. சிறுவன் சின்னத்தம்பியின் பாடல்களைக் கேட்ட சான்றோர் சிறுவனின் திறமையைப் பாராட்டி, அவரது தந்தையான வில்வராய முதலியாரிடம் அவரைப் பற்றிப் புகழ்ந்து வந்தார்கள். ஒருநாள் சிறுவனாக இருந்த சின்னத்தம்பிப் புலவர் வீதியிலே நின்று விளையாடிக் கொண்டிருந்தார். வில்வராய முதலியாரின் வீடு எது என்று தெரியாததால், அவரைத் தேடிவந்த ஒரு புலவர் வில்லவராய முதலியார் வீடு எங்கே இருக்கிறது என்று மகனிடமே வினாவினார். சிறுவனோ அவரது வீட்டைக் காட்டுவான் என்று எதிர்பார்த்திருந்த புலவருக்கு ஆச்சரியம் காத்திருந்தது. சிறுவனோ அவரைப் பார்த்து,

பொன்பூச் சொரியும் பொலிந்தசெழுந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம் - மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவ ராயன்றன்
வாசலிடைக் கொன்றை மரம்.

என்று கூறினான். அந்தப் பாடலைக் கேட்ட புலவர் அவரை மெச்சி 'இச்சிறு பருவத்தே இத்துணைச் சிறந்த கவியினாலே விடை கூறிய நீ வரகவியாதல் வேண்டும்' என ஆசி கூறிச் சென்றார்.

சின்னத்தம்பிப் புலவர் பதினைந்து வயதளவிற் சிதம்பரம் சென்று தலயாத்திரை செய்து மீளும்போது வேதாரணியத்தை அடைந்து அங்கே 'மறைசை அந்தாதி' பாடி அரங்கேற்றினார். அப்போது அவ்வாதீனத்து வித்துவானாகிய சொக்கலிங்கதேசிகர் என்பவர் புலவரைப் பற்றிக் குறிப்பிட்ட பாடலொன்று அவருடைய இயல்பை எடுத்து விளக்குகின்றது:

செந்தா தியன்மணிப் பூம்புலி யூரரைச் சேர்ந்துநிதம்
சிதா தியானஞ்செய் வில்லவ ராயன் றிருப்புதல்வன்
நந்தா வளஞ்செறி நல்லைச்சின் னத்தம்பி நாவலன்சீர்
அந்தாதி மாலையை வேதாட வேசர்க் கணிந்தனனே.

சின்னத்தம்பிப் புலவரின் ஆக்கங்களில் சிலவற்றையே ஆவணப்படுத்த முடிந்தது. அந்தாதி, கோவை, பள்ளு போன்ற வகையில் எழுதப்பட்ட பாடல்கள் சில இதற்குள் அடங்கும்.

கல்வளை அந்தாதி - இது யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் கல்வளையில் உள்ள விநாயகர் மீது புலவரால் பாடப் பெற்றது. ஏட்டு வடிவில் இருந்த ஈழத்துப் பழம் தமிழ் இலக்கியத்தில் ஒன்றான கல்வளை அந்தாதி சைவப்பிரகாச அச்சகத்தில் பதிப்புச் செய்யப்பட்டது. இதற்கான உரையை வல்வெட்டித்துறை இயற்றமிழ்ப் போதகாசிரியர் சிறீ. வைத்திலிங்கம் பிள்ளை எழுதியுள்ளார். 1934 இல் திருஞானசம்பந்த பிள்ளை என்பவர் இதைப் பதிவேற்றியிருந்தார். கல்வளை பிள்ளையார் கோயிலில் கல்வளை அந்தாதி பாடிய சின்னத்தம்பிப் புலவரின் நினைவாக அவரது உருவச்சிலை ஒன்று அங்கே அமைக்கப்பட்டுள்ளது.

கரவை வேலன் கோவை - கரவெட்டி பிரபு திலகராகிய வேலாயுதம் பிள்ளை மேற் பாடப்பட்டது. இக்கோவையை அரங்கேற்றியபோது ஒவ்வொரு செய்யுட்கும் ஒவ்வொரு பொற்றேங்காய் பரிசாக அளிக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. இச் செய்யுட்கள் சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர் அவர்களால் "செந்தமிழ்" பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

பறாளை விநாயகர் பள்ளு - சுழிபுரம், பறாளை என்னும் இடத்திலுள்ள விநாயகப் பெருமானின் மேற்பாடப்பட்டது. 130 பாடல்களைக் கொண்ட இந்தப் பள்ளு விநாயகரின் பெருமை தோன்றச் சிந்தும், விருத்தமும், கலிப்பாவும் விரவிச் செய்யப்பட்டுள்ளது.

மறைசை அந்தாதி - இது வேதாரணியேசுரர் மேற் பாடப்பெற்றது. இதற்கான உரையை உடுப்பிட்டி அ. சிவசம்புப் புலவரும், மதுரை மகா வித்துவான் சபாபதி முதலியாரும் எழுதியுள்ளார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டு ஆவணங்கள் தகுந்த முறையில் பாதுகாக்கப்படாமையால், சின்னத்தம்பிப் புலவர் என்ற பெயரில் யாழ்ப்பாணம், இணுவில் என்ற ஊரிலும் 19ஆம் நூற்றாண்டில் ஒரு புலவர் வாழ்ந்ததால், 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இவரைப் பின்னாளில் ஊரின் பெயரைச் சொல்லி 'நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்' என்றே இனம் காட்டி எழுதப்பட்டது. சிறுவயதிலேயே ஊரிலே இருந்த காலத்தில் எங்கள் பள்ளிப் பருவத்தில் இவரது பாடலை எங்களுக்குக் கற்பித்ததால், பொன் நிறத்தில் கொன்றை மரங்கள் பூத்திருக்கும் காட்சியைப் பார்க்கும் போதெல்லாம் அவரது பாடல்தான் நினைவுக்கு வரும். சின்னத்தம்பிப் புலவர் எங்களை விட்டு நீண்ட காலத்தின் முன் பிரிந்தாலும் (1760) அவர் தந்த இலக்கியங்கள் தமிழ் உலகில் காலமெல்லாம் நிலைத்து நிற்கும்.

HERITAGE
Education Funds

RESP
SAVINGS PLAN
கல்விச் சேமிப்புத் திட்டம்

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

EDUCATION IS
A GREAT GIFT FOR
YOUR FUTURE GENERATIONS


உங்கள் பிள்ளைகளின்
கல்விக்கான சேமிப்பு உங்கள்
எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

INCOME TAX
PREPARATION

Personal Income Tax
Small Business Income Tax
Computerized Returns

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

416. 841. 1866
416. 955. 9303
E.mail: ganthiy@rogers.com

# International Days

These are the international days currently observed by the United Nations. New international days are established regularly. The resolution establishing each international day is listed in parenthesis.

November

2 – International Day to End Impunity for Crimes against Journalists
5 – World Tsunami Awareness Day
6 – International Day for Preventing the Exploitation of the Environment in War and Armed Conflict )
10 – World Science Day for Peace and Development
14 – World Diabetes Day
16 – International Day for Tolerance
17 – World Philosophy Day
19 – World Toilet Day
20 – Africa Industrialization Day
20 – Universal Children's Day
20 – World Day of Remembrance for Road Traffic Victims
21 – World Television Day
25 – International Day for the Elimination of Violence against Women
29 – International Day of Solidarity with the Palestinian People

---

## நடுக்கம் என்றால்..

செல்ல நேர்ந்தால் தான் உபயோகிக்கும் அனைத்து மருந்துகளின் பட்டியலை மருத்துவரிடம் கொடுத்து ஆலோசனை பெறுவது அவசியமாகும்.

### போதையும் நடுக்கமும்

போதைப் பொருட்கள் நடுக்கத்தை ஏற்படுத்தலாம். முக்கியமாக மதுபானமும் புகைத்தலும் நடுக்கம் ஏற்படுவதற்கு முக்கிய காரணமாகும். அதேபோல போதையில் மூழ்கியவர் அதைத் திடீரென நிறுத்தினாலும் நடுக்கம் ஏற்படலாம். நிறுத்தும்போது ஏற்படும் நடுக்கம் தற்காலிகமானது சில நாட்களில் தணிந்துவிடும்.

### சிகிச்சை

நடுக்கம் ஏற்பட்டால் அதற்கான அடிப்படைக் காரணத்தை கண்டறிய வேண்டும். எனவே மருத்துவ ஆலாசனை பெறுவது அவசியம். பெரும்பாலான காரணங்களை விரிவாகவும் தெளிவாகவம் பேசுவதன் மூலம் கண்டறிய முடியும். இருந்தபோதும் இரத்தப் பரிசோதனைகள் மற்றும் CT scan MRI போன்றவையும் தேவைப்படலாம். சிகிச்சையின் அடிப்படை காரணத்தை துல்லியமாகக் கண்டறிவதே.

மருந்துகள் காரணமாயின் அவற்றை இனங்கண்டு மருத்துவ ஆலோசனையுடன் வேறு மருந்துகளை உபயோகிக்க வேண்டும். போதைப் பொருள்கள் காரணமாயின் அவற்றை நிறுத்த வேண்டும். மது சற்று அருந்தினால் சிலருக்கு நடுக்கம் குறையும். ஆயினும் அவ்வாறு குடிப்பது ஆபத்தானது. அவர்கள் மதுவிற்கு அடிமையாகி சீரழிந்து போவது பெரும் பிரச்சனை ஆகும். நடுக்கம் உள்ளவர்கள் கோப்பி தேநீர் கொக்கோ போன்ற பானங்கள் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். மனப்பதற்றமும் காரணம் என்பதால் அதைத் தணிக்க முயலவேண்டும். அரிதாக சத்திர சிகிச்சையும் தேவைப்படலாம்.

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்



# Opening Soon

## Shirdi Sai School of Canada

We are accepting registration (Kindergarten to Grade 5)
for this brand new school opening soon in Scarborough.
To register your interest please go to:

**http://shirdisaischoolofcanada.com/**

# R & S AUTO SALES

Top Quality Used Car Dealer

வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட
வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

**36 வருட அனுபவம்**



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha

**R & S Auto Sales Inc.**
**Radha Motor Inc.**

3030 Markham Road
Scarborough, ON

**416-412-3838**
**416-836-5825**


# 'Broken Dreams', 'கண்டம்' திரைப்படங்களின் முன்னோட்டம் வெளியீடு.

ஒக்ரோபர் 14, வெள்ளி மாலை றிச்மன்ட் ஹில் யோர்க் திரையரங்கில் கனடிய இளம் இயக்குனர் பிராஸ் லிங்கம் இயக்கிய இரு திரைப்படங்களின் முன்னோட்டம் (Trailer) வெளியிடப்பட்டது. ஜேர்மனியில் வாழும் ஈழத்துக் கலைஞர்களோடு ஜேர்மனியக் கலைஞர்களும் இணைந்து நடித்த உளவியல் - திகில் சார்ந்த திரைப்படமான Broken Dreams மனித மனோநிலையின் ஆழமான பிளவுகள் தொடர்பாக ஆராய்கிறது. கதாநாயகனின் ஆழ்மனதில் பொதிந்துள்ள இருண்ட பக்கங்களை இரசிகர்களுக்கு எடுத்துக்காட்டுகின்றது. ஜேர்மன், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் உருவாக்கப்பட்ட இத்திரைப்படம், பேர்ளின் நகரில் ஒளிப்பதிவு செய்யப்பட்டது.


அறிவியற் புனைவுத் திகில் (Sci-fi thriller) திரைப்படமான கண்டம், பண்டைய வரலாறுகளில் நாம் படித்த குமரிக்கண்டத்தின் இருப்பு தொடர்பாகவும் தமிழ் நாகரிகத்தின் மிகத்தொன்மையான வரலாறு தொடர்பாகவும் எடுத்துக்காட்டுகின்றது. எழில்மிகு யாழ்மண், பேர்ளின் நகரம் ஆகியன இந்தத் திரைப்படத்தின் பின்னணியாக அமைந்துள்ளன. சில காட்சிகள் வெனிஸ் நகரிலும் ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு மொழிகளில் தயாரிக்கப்பட்டுள்ள இந்தத் திரைப்படத்தில் இந்தியா, இலங்கை, ஜேர்மனி, பிரான்ஸ், தென்னாபிரிக்கா, மலேசியாவைச் சேர்ந்த கலைஞர்கள் பங்கேற்றிருக்கின்றனர். அறிவியல், சண்டை, கற்பனை, புராணம், வரலாறு ஆகியவற்றை இசைவாக ஒன்றுசேர்த்து உருவாக்கப்பட்ட திரைப்படமே கண்டம். இத்திரைப்படங்களை ரொறன்ரோவில் கட்டுமானத் தொழிலதிபராக இருக்கும் திரு. வரன் சின்னத்தம்பி தனது புதிய தயாரிப்பு நிறுவனமான Next Productions மூலம் தயாரித்துள்ளார். இந்த இரு படங்களினதும் இயக்குநர் பிராஸ் லிங்கம் பல்வேறு தொலைக்காட்சி, மேடை நிகழ்ச்சிகளில் ஒளிப்பதிவாளராகவும் தயாரிப்பாளர், எழுத்தாளர், இயக்குநராகவும் பணியாற்றியவர். தனது முதலாவது திரைப்படமான Broken Dreams ஐ இயக்கிய கையோடு 'கண்டம்' படத்தையும் இயக்கியிருக்கிறார். அடுத்த ஆண்டின் தொடக்கத்தில் திரைக்கு வருகின்றன இரு திரைப்படங்களும்.

இயக்குநர், தயாரிப்பாளரோடு இப்படங்களின் நிறைவேற்றுத் தயாரிப்பாளர் ராஜி நாயரும் அனைத்துலக அளவில் சந்தைப்படுத்தும் பொறுப்பை ஏற்றிருக்கும் எம். வெங்கடேசன் ஆகியோரும் ஊடகர், பார்வையாளரின் கேள்விகளுக்குப் பதிலளித்ததோடு தம் கருத்துகளையும் பகிர்ந்துகொண்டனர். நிறைவில் Next Productions இன் அடுத்த தயாரிப்பான, லெனின் எம். சிவத்தின் இயக்கத்தில் உருவாகும் 'ரூபா' திரைப்படத்தின் முன்னோட்டமும் காண்பிக்கப்பட்டது.

# அமெரிக்க தேர்தல் முறை

ஜனாதிபதியைத் தெரிவுசெய்யும் தகுதி படைத்த தேர்வாளர்களுக்கே மக்கள் உண்மையில் வாக்களிக்கிறார்கள். Electors என்றழைக்கப்படும் இந்தத் தேர்வாளர்கள், தங்களது வாக்கை ஜனாதிபதி பதவிக்குத் தோற்றும் வேட்பாளருக்கு வழங்குவார்கள். இந்த தேர்வாளர்கள் மொத்தம் 538 பேர் இருக்கிறார்கள். தேர்தல் தொகுதி மற்றும் மாநிலத்தின் மக்கள் தொகைக்கேற்ப விகிதாசார அடிப்படையில், ஒவ்வொரு மாநிலத்திற்கும் இத்தனை தேர்வாளர்கள் என ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளார்கள். இந்த 538 பேரையும் Electoral College Voters என ஆங்கிலத்தில் அழைப்பார்கள். ஒரு மாநிலத்திற்கு ஆகக் குறைந்தது 3 தேர்வாளர்களாவது இருக்க வேண்டும். ஒரு மாநிலத்தின் செனட்டர் மற்றும் அரச பிரதிநிதிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து இந்தத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது.

இந்தத் தேர்வாளர்கள், அமெரிக்க ஜனாதிபதியையும் உப ஜனாதிபதியையும் தெரிவு செய்ய வாக்களிப்பார்கள். 270 வாக்குகளை ஒருவர் பெற்று விட்டால் தேர்தல் இழுபறிகளின்றி, ஜனாதிபதி தெரிவாகிவிடுவார். ஆனால், இந்த 270 என்ற மந்திர இலக்கத்தை அடைய இம்முறை இருவருக்குமே வாய்ப்புகள் மிகவும் குறைவாக உள்ளது. இருவருக்கும் கடும் போட்டியிருப்பதால், கருத்துக் கணிப்புகளெல்லாம் வெறும் நான்கு வீத வித்தியாசத்தையே பிரதிபலிக்கின்றன. அதாவது, நவம்பர் 8ம் திகதி நடைபெறும் தேர்தலின் முடிவுகள் வெளிவர காலதாமதம் ஆகலாம். பல முக்கிய மாநிலங்களில் தேர்தல் வாக்குகளை பல தடவை எண்ணும் நிலை ஏற்படலாம், மேலதிக பரிசோதகர்களும் கண்காணிப்பாளர்களும், பல மாநிலங்களுக்குச் சென்று மீள்பரிசீலனை செய்யும்நிலை உருவாகலாம், நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தால் இன்னும் தாமதங்கள் நீண்டு செல்லலாம் என்றெல்லாம் பலமான ஆரூடம் சொல்லப்படுகிறது.


DR. ILLANGO & ASSOCIATES
ORTHODONTICS, ORAL SURGERY, IMPLANT
Dental Office
BRACE FOR A GREAT SMILE
SCARBOROUGH
Kennedy / Finch
3852 Finch Ave. East
Suite 204 & 303
Scarborough, ON
Tel: 416-292-7004
905-47 BRACE (27223)
BRAMPTON / MISSISSAUGA
Steeles / Hurontario
7920 Hurontario Street
Unit # 37
Brampton, ON
Tel: 905-457-1700
MARKHAM
Markham / 16th
(New Location)
9500 Markham Road
Unit # 107
Markham, ON
905-47 BRACE (27223)

ISSN 1206-0585


# FREE ! Real Estate Classes

## Successful Real Estate Office With Over 425 Salespeople

TOP 4 HOMELIFE OFFICE IN CANADA 2015
TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2014
TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2013
TOP 5 HOMELIFE OFFICE IN CANADA 2012
TOP 6 HOMELIFE OFFICE IN CANADA 2011
TOP 7 HOMELIFE OFFICE IN CANADA 2010

- *No Franchise Fees
- *No Monthly Fees
- *No Desk Fees

**International Award Winning Office**
**Top 4th HomeLife Office In Canada-2015**
Over 2000 Sq.Ft Office Located @ Markham Rd & Steeles Ave E

- Over 425 Salespersons.
- Top 5th Listing Office in Canada
- Weekly Training, Full Services Office
- 24 Hrs Access to the Office
- Office Open 7 Days/ Week Including Holidays



HomeLife /Future Realty Inc., Brokerage
205 -7 Eastvale Dr., Markham, Ontario, L3S 4N7
Bus: 905.201.9977 | 416.264.0101
INDEPENDENTLY OWNED AND OPERATED

**Selva Vettyvel**
*Broker of Record*
Tel:416-568-4301

## வீடு, வியாபார நிலையங்கள் வாங்க, விற்க..

கனடியத் தமிழர் சமூகத்தில் நம்பிக்கையான ஒரு முகவர்





அடமான (Mortgage)
ஒழுங்குகளும்
செய்து கொடுக்கப்படும்

2015 Rookie of the Year
2015 Platinum Club Award

கமல் நவரட்ணம்
**Kamal** Navaratnam
Sales Representative
Direct: **416-671-4815**
E mail:kamalhomesale@gmail.com

HomeLife/Future Realty Inc.
Brokerage
205-7 Eastvale Drive
Markham ON, L3S 4N8
Bus: (905) 201-9977
Fax: (905) 201-9229
Independently Owned and Operated

*Trusted and reliable services*